இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

# பாதுகாவலன்

PAATHUKAVALAN

150 ஆண்டுகள் 1876 - 2026

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 09 | திகதி :02.08.2026 | விலை : 50.00

# செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி அமைதிப் போராட்டம்!




யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட அமைதிப் போராட்டம் ஆடி மாதம் 30ஆம் திகதி நேற்றைய தினம் செம்மணி பகுதியில் நடைபெற்றது. ஆணைக்குழு தலைவர் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்களின் ஒழுங்கமைப்பில், அரியாலை புனித யூதாததேயு திருச்சுரூபம் முன்பாக ஆரம்பமான பேரணி செம்மணிச் சந்தியைச் சென்றடைந்தது. பேரணியின் நிறைவில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர் ஆணையாளர் திரு. வோல்கர் ரேர்க் அவர்களிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்கள் வாசித்தார்.

அறிக்கையில், 2026ஆம் ஆண்டு ஆடி மாதம் 21ஆம் திகதி வரையில் சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்த சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது. மேலும், மனித எச்சங்களை அகழ்ந்தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை மினசோட்டா நெறிமுறை உள்ளிட்ட சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அத்துடன், செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்து, சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சாட்சியாளர்களின் பாதுகாப்பிற்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியம் என்றும் கோரப்பட்டுள்ளது. இப்போராட்டத்தில் யாழ்ப்பாண மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாண மாகாண அமல மரித்தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் என 100-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

## சேலம் - யாழ் ஆயர்கள் சந்திப்பு



சேலம் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அருள்செல்வம் இராயப்பன் அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த நிலையில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். இச்சந்திப்பு கடந்த 25ஆம் திகதி யாழ். மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் நடைபெற்றது.

## புதிய ஆயரின் பணிப்பொறுப்பேற்பு திருநிகழ்விற்கு ஆயத்தமாகும் யாழ் திருஅவை

யாழ் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக நியமனம் பெற்றுள்ள கொழும்பு உயர்மறை மாவட்டத் துணை ஆயர் பேரருட்கலாநிதி பி.அன்ரன் றஞ்சித் ஆண்டகை அவர்கள் இம்மாதம் 26ம் திகதி யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் இடம்பெறும் திருப்பலியிலே பணிப்பொறுப்பேற்கவுள்ளார். யாழ் ஆயராகப் பணியாற்றிய பேருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் தம் பணியிலிருந்து ஓய்வுபெறும் நிலையில் இப்புதிய நியமனம் வழங்கப்படுகின்றது. இப்புதிய ஆயரின் பணிப்பொறுப்பேற்பு திருப்பலியில் யாழ் மறைமாவட்டக் குருக்கள் புதிய ஆயருக்குத் தமது கீழ்ப்படிவை வழங்குவர்.

இத்திருநிகழ்வில் இலங்கையிலுள்ள அனைத்து மறைமாவட்டங்களின் ஆயர்கள், குருமுதல்வர்கள், யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்பு, கொழும்பு மறைமாவட்டக் குருக்களும், யாழ் மறைமாவட்ட அனைத்து ஆலயங்களின் பொதுநிலைப் பிரதிநிதிகளும், அழைப்புப் பெறும் விசேட அதிதிகளும் பங்கேற்கவுள்ளனர். இப்பணிப்பொறுப்பேற்பு நிகழ்விற்கான பூர்வாங்க ஆயத்த ஏற்பாடுகள் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்பணி பி.யோ.ஜெபரட்ணம் அடிகளார் தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## ஆலயங்களில் சில தனிப்பட்டவர்களின் ஆதிக்கம் கூட்டொருங்கியக்க திரு அவையை செயல்படுத்த தடையாக இருக்கிறது

- யாழ் மறைமாவட்ட குரு முதல்வர்.



கூட்டொருங்கியக்க திரு அவையின் முக்கிய பண்புகள் சமத்துவம், சகோதரத்துவம், அனைவரையும் உள்வாங்கும் செய்ற்பாடு ஆகியவையாகும். ஆனால் இவற்றை செயல்முறைபடுத்துவதற்கு சில ஆலயங்களில் சில தனிப்பட்ட பொதுநிலையினருடைய ஆதிக்கம் தடையாக இருப்பதாக குரு முதல்வர் தெரிவித்தார். நாம் குருக்களின் ஆதிக்கம் (Clericalism) பற்றி அதிகம் பேசுகின்றோம். அது உண்மையாக இருந்தாலும் தற்பொழுது பொது நிலையினர் சிலரின் ஆதிக்கம் மேலோங்கி இருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற யாழ்ப்பாண மறைக்கோட்ட அருட்பணி பேரவையினரின் கூட்டத்தின்பொழுது குரு முதல்வர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ➡ ப.2

## மடுத்திருப்பதியில் வடக்கு - கிழக்கு இளம் குருக்களுக்கான தியானம்



வடக்கு கிழக்கு ஆயர் மன்றத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்ட இளம் குருக்களை இணைத்து முன் னெடுக்கப்பட்ட எம்மாவுஸ் தியானம் கடந்த் 27ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை மன்னார் மடுத்திருத்தலத் தியான மண்டபத்தில் நடைபெற்றது. வடக்கு கிழக்கு ஆயர் மன்ற த்தலைவரும் திருகோணமலை மறைமாவட்ட ஆயருமான பேரருட்தந்தை நோயல் இம்மானுவேல் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இத்தியானத்தை ➡ ப.2

## மடு அன்னையின் புதிய ஆலயத் திறப்பு விழாவும், திருவிழாவும்





மாரீசன்கூடல் வாழ்வகப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்டுவந்த மடுமாதா ஆலய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் அவ்ஆலய திறப்புவிழாவும் திருவிழாவும் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின்ஞானப் பிரகாசம் அவர்கள் கலந்து புதிய ஆலயத்தை ஆசீர்வதித்து திறந்துவைத்து திருவிழாத் திருப்பலியை ➡ ப.2

## கொழும்பில் யாழ் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி கவனயீர்ப்புப் போராட்டம்




கொழும்பு கோட்டை புகையிரத நிலையம் முன்பாக யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிக்கு நீதிகோரி முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்புப் போராட்டம் கடந்த 30ஆம் திகதி நடை பெற்றது. அருட்தந்தையர்கள் ஜீவந்த பீரிஸ், சத்யவேல், மற்றும் ஷெறாட் ஆகியொரின் ஒழுங்கு படுத்தலில் ➡ ப.2

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

முப்பொன் விழா

# எமது எண்ணம்

## செம்மணிக்கு சர்வதேச நீதி விசாரணை! அமைதிப் பேரணியில், ஐ.நாவுக்கு மனு

இலங்கைத்தீவின் வடக்கு, கிழக்குக் கத்தோலிக்கத் திருஅவை, சமூக-சமயப் பணிகளுக்கு அப்பால் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் நியாயமான விவகாரங்களில் அதிகளவு அக்கறை செலுத்தி வருகின்றமை யாரும் மறுக்க முடியாத உண்மையாகும்.

1980களில் இருந்து அதற்காகப் பல அர்ப்பணிப்புகளை மேற்கொண்டு வரும் தமிழ்க் கத்தோலிக்கத் திருஅவை, போர்க்காலத்தில் பல அருட்பணியாளர்களைப் பலி கொடுத்துமுள்ளது.

பல தேவாலயங்கள் குண்டுத்தாக்குதல்கள் மற்றும் வன்முறைகளால் பாதிக்கப்பட்டுமுள்ளன. போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்கள் தேவாலயங்களில் தஞ்சமடைய இடமளித்து, அவர்களுக்குத் தேவையான உணவு, உடை உறைவிடம் போன்ற அத்தியாவசியத் தேவைகள் அனைத்தையும் அருட்பணியாளர்கள் செய்துள்ளனர். 2009ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான சூழலிலும், சமயப் பணிகளுக்கு அப்பாலான சமூகப் பணிகளைக் கத்தோலிக்கத் திருஅவை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றது.

இப்பின்னணியில், செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து சுமார் 400க்கும் மேற்பட்ட மனித எலும்புக்கூடுகள் மற்றும் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான நீதி விசாரணை இலங்கை அரசாங்கத்தினால் நேர்மையாக நடத்தப்படும் என்ற நம்பிக்கையீனம் மக்கள் மத்தியில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இதன் காரண - காரியமாக யாழ் மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவின் அழைப்பினை ஏற்று யாழ் மறைமாவட்டத்தில் உள்ள குருக்கள் அருட்சகோதரிகள் ஒன்றிணைந்து சர்வதேச நீதி விசாரணையை கோரி சென்ற 30 ஆம் திகதி வியாழக்கிழமை யாழப்பாணம் செம் மணியில் அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினோம்.

மக்களின் நியாயமான கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும், ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளருக்கு அன்றைய தினம் அனுப்பி வைத்துள்ளோம்.

யாழ்ப்பாண மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு இந்த அமைதிப் போராட்டத்திற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தது. ஆணைக்குழுவின் தலைவர் அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அடிகளாரின் ஒழுங்கமைப்பில், அரியாலை புனித யூதா ததேயு திருச்சுரூபம் முன்பாக ஆரம்பமான பேரணி செம்மணிச் சந்தியைச் சென்றடைந்தது.

மனித உரிமைகள் உயர் ஆணையாளரிடம் கையளிக்கப்படவுள்ள அவசர வேண்டுகோள் அறிக்கையை அருட்பணி அகஸ்ரின் அடிகளார் தமிழிலும் அருட்பணி டேவிட் அடிகள் ஆங்கிலததிலும் வாசித்து வழங்கினர்.

2026ஆம் ஆண்டு ஆடி மாதம் 21ஆம் திகதி வரையில், சிறுவர்கள் மற்றும் சிசுக்களின் எச்சங்கள் உட்பட 454 மனித எலும்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், உண்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்தச் சுயாதீன சர்வதேச விசாரணை முன்னெடுக்கப்பட வேண்டும் என அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மனித எச்சங்களை அகழ்ந்தெடுத்தல், அடையாளம் காணல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை சர்வதேச தரநிலைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சுயாதீன டி.என்.ஏ. பரிசோதனை, குடும்பங்களின் பங்கேற்பு மற்றும் சாட்சியாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது பாதிக்கப்பட்ட உறவினர்களின் சார்பில் மாத்திர மல்லாது, ஒட்டு மொத்த ஈழத்தமிழர்களின் மன உணர்வுகளையும் அறிக்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், செம்மணி அகழ்வுப் பணிகளை ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் தொடர்ந்து கண்காணித்து, சான்றுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், சாட்சியாளர்களின் பாதுகாப்பிற்காக யாழ்ப்பாணத்தில் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையின் பிரசன்னம் அவசியம் என்றும் அந்த அமைதிப் பேரணியில் பங்குபற்றிய அருட்பணியாளர்கள் அங்கு கருத்து வெளியிட்டனர்.

இந்த அமைதிப் போராட்டத்தில் யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம், யாழ்ப்பாண மாகாண அமலமரித்தியாகிகள் சபையின் முதல்வர் அருட்தந்தை போல் ஜெயந்தன் பச்சேக், அருட்தந்தையர்கள், துறவிகள் மற்றும் அருட்சகோதரிகள் என நூற்றுக்கும் அதிகமானோர் பங்குபற்றினர். இந்த அமைதிப் போராட்டத்திற்கு வடமாகாணத்தில் உள்ள அனைத்துப் பொது அமைப்புகளும் ஆதரவு வழங்கியதுடன், அருட்பணியாளர்கள் நடத்திய இந்த அமைதிப் போராட்டம் சர்வதேச அரங்கில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அதேநேரம், இந்த அமைதிப் போராட்டத்தின் மூலம், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உரிய நடவடிக்கை எடுக்கும் எனத் தாம் நம்புவதாகப் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். ஜே.வி.பி.யை மையப்படுத்திய தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உரிய விசாரணை நடத்தப்படும் என உறுதியளித்திருக்கிறது. ஆனாலும், கடந்த முப்பது ஆண்டுகள் வரை எதுவித விசாரணைகளையும் எந்தவொரு அரசாங்கமும் நடத்தவில்லை என்பதே உண்மை. அத்துடன் இலங்கை நீதித்துறை கட்டமைப்பின் மீது நம்பிக்கை இழந்திருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கை நீதித்துறை நம்பகமற்றது எனவும், சர்வதேச தரத்திலான விசாரணைப் பொறிமுறையை இலங்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தனது அறிக்கையில் வலியுறுத்தியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அருட்பணி.எஸ்.எயின்சிலி றொஷான்

## இறைவனின் அழைப்பைக் கேட்டு உறுதியுடன் அவரைப் பின்பற்ற இளைஞர்களுக்கு திருத்தந்தை அழைப்பு!

ஈக்வடோரின் 7வது தேசிய இளைஞர் தினத்தையொட்டி காணொளிச் செய்தி வழங்கிய திருத்தந்தை, இளைஞர்கள் ஆண்டவரின் அழைப்பைக் கேட்டு உறுதியுடன் கிறிஸ்துவைப் பின்பற்றுமாறு அழைப்பு விடுத்தார்.

இயேசுக் கிறிஸ்துவே மனித வாழ்விற்கு உண்மையான அர்த்தத்தை அளிப்பவர் என்று வலியுறுத்திய திருத்தந்தை, “ஆண்டவரின் அழைப்பைக் கேட்டு, உறுதியுடனும் துணிவுடனும் அவரைப் பின்பற்றுங்கள்” என்று இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

ஈக்வடார் நாட்டில் இபாரா நகரில் ”உலகை நான் வென்றுவிட்டேன் துணிவுடன் இருங்கள்” (யோவான் 16:33) என்ற கருப்பொருளில் இடம்பெற்று வரும் 7வது தேசிய இளைஞர் தினத்தை முன்னிட்டு அனுப்பிய காணொளிச் செய்தியில் இவ்வாறு மொழிந்த திருத்தந்தை, “இயேசு கிறிஸ்துவைச் சந்திக்கும் அனுபவம் நம் இதயத்தை மகிழ்ச்சியால் நிரப்புகிறது என்றும், அது அவரது அன்பிற்கும் இரக்கத்திற்கும் சாட்சிகளாக வாழும் வலிமையை நமக்குத் தருகிறது என்றும் கூறினார்.

மேலும், இளைஞர்கள் திருஅவையின் மதிப்புமிக்க செல்வம் என்று வலியுறுத்திய திருத்தந்தை, “திருஅவைக்கு உங்கள் மகிழ்ச்சி, உங்கள் துணிவு, உங்கள் விசுவாசச் சாட்சி தேவைப்படுகிறது. உங்கள் வாழ்வின் சாட்சியின் வழியாக இன்னும் பலர் கிறிஸ்துவை அறிந்து கொள்ள முடியும். எனவே, அவரது அன்பு உங்களை மாற்றியமைக்க அனுமதியுங்கள்” என்று கேட்டுக்கொண்டார்.

இறுதியாக, மன்னிப்பு, ஒப்புரவு, அமைதியின் தூதர்களாக இளைஞர்கள் வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்ட திருத்தந்தை, ஈக்வடார் இளைஞர்களை அன்னை மரியாளின் பாதுகாப்பில் ஒப்படைத்து, இறைவனின் திட்டத்தை ஏற்று வாழ அவர் முன்மாதிரியாக இருப்பாராக என்று இறைவேண்டல் செய்து காணொளிச் செய்தியை நிறைவு செய்தார்.

## மாமன்றப் பயணத்தை மதிப்பீடு செய்ய ‘நினைவுகூருதல்’ ஆவணத்தை அறிமுகப்படுத்திய ஆயர் மாமன்றச் செயலகம்

ஆயர் மாமன்றத்தின் பொதுச் செயலகம், 2027ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூர் திருஅவைகளின் மதிப்பீட்டுக் கூட்டங்களுக்கான தயாரிப்பில் உதவும் “நினைவுகூருதல்” என்ற புதிய வழிகாட்டி ஆவணத்தை வெளியிட்டுள்ளது.

உள்ளூர் திருஅவையின் மதிப்பீட்டுக் கூட்டத் தயாரிப்புக்கான வழிகாட்டி” என்ற புதிய ஆவணத்தை வெளியிட்டுள்ளது. 2027 ஆம் ஆண்டின் முதல் பாதியில் இடம்பெறும் மதிப்பீட்டுக் கூட்டங்களுக்கு மறைமாவட்டங்களும், கீழைக் கத்தோலிக்க மறைமாவட்டங்களும் (eparchies) தங்களைத் தயார்படுத்திக் கொள்ள உதவும் வகையிலான இந்தப் புதிய வெளியீடு, மாமன்றச் செயல்பாடுகளில் உள்ளூர் அளவிலான செயலாக்கத்தின் நிறைவைக் குறிக்கிறது.

- (தொடர்ச்சி 7ம் பக்.)

### மடுத்திருப்பதியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்பெயின் நாட்டிலிருந்து வருகைதந்த எம்மாவுஸ் தியான குழுவினர் நெறிப்படுத்தினர்.

இத்தியானத்தில் 48 மணித்தியால நற்கருணை எழுந்தேற்றம், நற்கருணைச் சந்திப்பு, குழுச்செபம், அனுபவப் பகிர்வு, தியான உரைகள், ஒப்புரவு அருட்சாதனம் என்பன இடம்பெற்றன. இறுதிநாள் நிகழ்வுகள் 29ஆம் திகதி நடைபெற்றதுடன் அன்றைய தினம் மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் மன்னார் மடுத்திருத்தலத்தில் திருப்பலியும் தொடர்ந்து அனுபவ பகிர்வு என்பவற்றுடன் ஆயர் மன்றச் செயலாளரான யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்களின் நன்றியுரையும் இடம்பெற்றன. இத்தியானத்தில் நான்கு தமிழ் மறைமாவட்டங்ளையும் சேர்ந்த 50ற்கும் அதிகமான குருக்கள் பங்கு பற்றியிருந்தனர்.

### கொழும்பில் யாழ் சிந்துபாத்தி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற இப்போராட்டத்தில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளென 50ற்கும் அதிகமானவர்கள் பங்கு பற்றியிருந்தனர். இப்போராட்டத்தின் போது ஊடகத்திற்கு கருத்து தெரிவித்த அருட்தந்தை ஜீவந்த பீரிஸ் அவர்கள் செம்மணியில் வெளிப்பட்ட பாரிய மனிதப் புதைகுழியை மூடிமறைக்க முடியாதெனக் குறிப்பிட்டு இதற்கான விரிவான விசாரணை சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட்டு, புதைகுழியில் புதைக்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிந்து நீதி வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்தி பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் நீதி கிடைக்கும் வரை, வடக்கு மற்றும் தெற்கைச் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்து தொடர்ந்து குரல் கொடுப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

### மடு அன்னையின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)...

தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். ஆலயத் திருவிழாவிற்கான ஆயத்தநாள் வழிபாடுகள் 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற்கருணை விழா இடம்பெற்றது.

நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். மன்னார் மடுத்திருத்தலத்தின் தோற்றத்துடன் அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயத்திற்கான அடிக்கல் 2019 ஆடி மாதம் 06ஆம் திகதி அப்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை டினேஸன் அவர்களின் பணிக்காலத்தில் நாட்டப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை கான்ஸ்போவர் அவர்களின் பணிக்காலத்தில் கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கபட்டுத் தற்போதைய பங்குத்தந்தை அருட்தந்தை ஞானறூபன் அவர்களின் பணிக்காலத்தில் கட்டுமானப் பணிகள் நிறைவடைந்து திறந்துவைக்கப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### ஆலயங்களில் சில தனிப்பட்ட...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எமது மறை மாவட்டத்தில் கூட்டொருங்கி யக்க திரு அவையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றால். இப்படியானவர்கள் தங்கள் ஆதிக்க போக்கைக் கைவிட்டு எல்லாரையும் சமமாக மதிக்கின்ற நிலையை ஏற்றுக்கொள்ள முன் வர வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

அன்பின் மகிழ்வு

# நமது நம்பிக்கையின் வேர்களைப் போற்றுவோம்

## ஆறாவது உலகத் தாத்தா, பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் – 26 ஜூலை 2026

திருத்தந்தை பிரான்சிஸ் தமது பாட்டி ரோசாவைப் பற்றி மிகுந்த அன்புடனும் நன்றியுடனும் அடிக்கடி நினைவுகூர்ந்தார். சிறுவயதில் அவருக்கு இறைநம்பிக்கையின் முதல் பாடங்களைக் கற்றுக்கொடுத்தவர்களில் பாட்டி ரோசா முக்கியமானவர். செபிப்பது, இறைவனை நம்புவது, ஏழைகளிடம் இரக்கம் காட்டுவது, துன்பத்தின் மத்தியிலும் நம்பிக்கையை இழக்காமல் இருப்பது போன்றவற்றை அவர் பாட்டியின் வாழ்விலிருந்து கற்றுக்கொண்டார்.

உலகம் திருத்தந்தை பிரான்சிஸை ஒரு திருச்சபைத் தலைவராகவும் ஏழைகளின் குரலாகவும் அறிந்தது. ஆனால் அவரது இதயத்தையும் ஆன்மிக வாழ்வையும் வடிவமைத்தவர்களில் ஒருவர், குடும்பத்திற்குள் அமைதியாக வாழ்ந்த அவரது பாட்டி. ஒரு பாட்டியின் எளிய செபமும் வாழ்வின் சாட்சியாகும் உலகளாவிய திருச்சபையின் தலைவ ரது வாழ்வில் எத்தகைய ஆழமான தாக் கத்தை ஏற்படுத்த முடியும் என்பதற்கு இது ஓர் அழகிய சான்றாகும்.

தாத்தா, பாட்டிகள் குடும்பத்தின் நினைவையும் நம்பிக்கையையும் அடுத்த தலைமுறைக்குக் கடத்துபவர்கள் என்பதைத் திருத்தந்தை பிரான்சிஸ் தொடர்ந்து வலியுறுத்தினார். இந்த ஆழமான குடும்ப அனுபவமும், 2021ஆம் ஆண்டு உலகத் தாத்தா, பாட்டிகள் மற்றும் முதியோர் தினத்தை அவர் ஏற்படுத்துவதற்குத் தூண்டுதலாக இருந்தது. அன்னை மரியாவின் பெற்றோரும், கிறிஸ்தவ மரபின்படி இயேசுவின் தாத்தா, பாட்டிகளுமான புனித சுவக்கீன் மற்றும் புனித அன்னம்மாளின் திருநாளுக்கு அருகில் வரும் ஜூலை மாதத்தின் நான்காவது ஞாயிற்றுக்கிழமையில் இந்நாள் கொண்டாடப்படுகிறது.

இது வெறும் வாழ்த்துகளையும் பரிசுகளையும் வழங்கும் நாள் அல்ல. நமது குடும்பம், நம்பிக்கை, மொழி, பண்பாடு மற்றும் சமூகத்தின் வேர்களாக விளங்கும் முதியவர்களின் மாண்பு, ஞானம், தியாகம் மற்றும் இறை அழைப்பை உணர்ந்து மதிப்பதற்கான நாள்.

### "நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்"

2026ஆம் ஆண்டின் ஆறாவது உலகத் தாத்தா, பாட்டிகள் மற்றும் முதியோர் தினத்திற்காகத் திருத்தந்தை பதினான்காம் லியோ, "நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்" (எசாயா 49:15) என்ற கருப்பொருளைத் தேர்ந்தெடுத்துள்ளார். தனிமையிலும் புறக்கணிப்பிலும் வாழும் முதியவர்களுக்கு இது இறைவன் வழங்கும் ஆறுதல் மற்றும் எதிர்நோக்கின் செய்தியாகும்.

"ஆண்டவர் என்னைக் கைவிட்டார் என் தலைவர் என்னை மறந்துவிட்டார்" (எசாயா 49:14) என்று சீயோன் புலம்பியபோது, இறைவன் ஒரு தாயின் அன்பை எடுத்துக்காட்டாகக் கொண்டு பதிலளிக்கிறார்: "ஒரு தாய் தன் பாலகனை மறப்பாளோ? அவள் மறந்தாலும் நான் உன்னை மறக்கமாட்டேன்" (எசாயா 49:15).

இறைவனின் நினைவில் யாரும் பெயரற்றவர்கள் அல்லர். நமது உருவம் அவரது உள்ளங்கைகளில் பொறிக்கப்பட்டுள்ளது என்று எசாயா அறிவிக்கிறார் (எசாயா 49:16). முதுமை, நோய், உடல் பலவீனம் அல்லது பிறரைச் சார்ந்திருக்கும் நிலை ஆகியவை ஒருவரை இறைவனின் அன்பிலிருந்து அகற்றுவதில்லை.

இன்றும் பல முதியவர்கள், "இன்னும் யாருக்காவது நான் தேவையா?", "என்னை யாராவது நினைக்கிறார்களா?" என்று தங்களுக்குள் கேட்கின்றனர். அவர்களது பிள்ளைகள் தொலைவில் வாழலாம் வாழ்க்கைத் துணையை இழந்திருக்கலாம் உடல் நலம் குன்றியிருக்கலாம் ஆலயத்திற்குச் செல்ல முடியாமல் இருக்கலாம். சிலர் மனிதர்களால் சூழப்பட்டிருந்தாலும், மனம்விட்டுப் பேசுவதற்கு ஒருவரும் இல்லாமல் தனிமையை அனுபவிக்கின்றனர்.

அத்தகைய ஒவ்வொருவரிடமும் இறைவன், "நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று கூறுகிறார். ஆனால் இந்த இறைவாக்கு நம்மையும் பொறுப்புக்கு அழைக்கிறது. இறைவன் முதியவர்களை மறக்கவில்லை என்று நாம் அறிவித்துவிட்டு, நமது குடும்பத்திலோ அயலிலோ பங்குத்தளத்திலோ இருக்கும் முதியவரைத் தனிமையில் விட்டுவிட முடியாது. இறைவனின் நினைவுகூரும் அன்பு, நமது சந்திப்பு, உரையாடல், செபம் மற்றும் பராமரிப்பின் வழியாகக் காணக்கூடியதாக இருக்க வேண்டும்.

### குடும்பத்தின் மறைந்திருக்கும் வேர்கள்

தாத்தா, பாட்டிகளை ஒரு மரத்தின் வேர்களுக்கு ஒப்பிடலாம். மரத்தின் கிளைகள், இலைகள், மலர்கள், கனிகள் ஆகியவற்றைப் பார்த்து நாம் மகிழ்கிறோம். ஆனால் மண்ணுக்கடியில் மறைந்திருக்கும் வேர்களே அந்த மரத்தின்



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
அகவொளி குடும்ப நல மையம்

உயிரைத் தாங்குகின்றன. வேர்களை நாம் எப்போதும் பார்ப்பதில்லை. ஆனால் அவை இல்லாமல் மரத்தால் நிலைத்து நிற்க முடியாது.

குடும்ப வாழ்விலும் இதுவே உண்மை. நமது கல்வி, நம்பிக்கை, மொழி, பண்பாடு மற்றும் விழுமியங்களுக்குப் பின்னால் முந்தைய தலைமுறையினரின் உழைப்பும் தியாகமும் இருக்கின்றன. பல தாத்தா, பாட்டிகள் பாராட்டையோ அங்கீகாரத்தையோ எதிர்பார்க்காமல் குடும்பங்களுக்காக உழைத்தார்கள், செபித்தார்கள், துன்பங்களைத் தாங்கினார்கள். தங்களுக்குக் கிடைக்காத வாய்ப்புகள் பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காகப் பல தியாகங்களைச் செய்தார்கள்.

பல கத்தோலிக்கர்களின் முதல் மறைக்கல்வி ஆசிரியர் ஒரு பாட்டியாகவோ தாத்தாவாகவோ இருந்திருப்பார். சிலுவை அடையாளம் இடுவது, செபமாலை செபிப்பது, இரவு உறங்குவதற்கு முன் இறைவனிடம் பேசுவது, ஞாயிறு திருப்பலியில் பங்கேற்பது, துன்பத்தில் இறைவனை நம்புவது போன்றவற்றை அவர்களிடமிருந்தே நாம் கற்றிருக்கலாம். அவர்கள் இறையியலை முறையாகப் படித்திருக்காமல் இருக்கலாம். ஆனால் அவர்கள் வாழ்ந்த மன்னிப்பு, தியாகம், பொறுமை மற்றும் செப வாழ்வு ஓர் ஆழமான இறையியல் பாடமாக அமைந்தது.

முதுமையும் இறைவனின் திட்டத்தில் கனிதரும் பருவமே என்பதைத் திருவிவிலியம் காட்டுகிறது. ஆபிரகாமும் சாராவும் தங்கள் முதுமையில் இறைவனின் வாக்குறுதியைப் பெற்றார்கள். மோசே இஸ்ரயேல் மக்களை வழிநடத்த அழைக்கப்பட்டபோது அவருக்கு எண்பது வயது. சிமியோனும் அன்னாவும் முதுமையில் செபத்துடன் காத்திருந்து மெசியாவைக் கண்டுகொண்டார்கள். உடல் வலிமை குறைந்தாலும், செபம், ஆலோசனை, சாட்சி, பொறுமை மற்றும் ஆசீரின் வழியாக முதியவர்கள் தொடர்ந்து இறையாட்சியைக் கட்டியெழுப்புகின்றனர்.

### பொறுமையின் கடனை உணர்த்தும் கதை

ஒரு முதிய தந்தை தனது மகனுடன் வீட்டின் முன்புறத்தில் அமர்ந்திருந்தார். அருகிலிருந்த மரத்தில் ஒரு காகம் வந்து அமர்ந்தது. "மகனே, அது என்ன?" என்று தந்தை கேட்டார். "அது ஒரு காகம், அப்பா" என்று மகன் பதிலளித்தான்.

சிறிது நேரத்தில் தந்தை மீண்டும் அதே கேள்வியைக் கேட்டார். மகனும் பதிலளித்தான். தந்தை அதே கேள்வியைப் பலமுறை கேட்டபோது, மகன் பொறுமையிழந்து, "எத்தனை முறை சொல்வது? அது ஒரு காகம்! ஏன் ஒரே கேள்வியைத் திரும்பத் திரும்பக் கேட்கிறீர்கள்?" என்று கோபமாகக் கத்தினான்.

தந்தை எதுவும் பேசாமல் வீட்டிற்குள் சென்று, பழைய நாட்குறிப்பு ஒன்றை எடுத்துவந்து மகனிடம் கொடுத்தார். அதில் இவ்வாறு எழுதப்பட்டிருந்தது: "இன்று என் சிறிய மகன் என்னுடன் தோட்டத்தில் அமர்ந்திருந்தான். ஒரு காகத்தைப் பார்த்து, 'அப்பா, அது என்ன?' என்று இருபத்து மூன்று முறை கேட்டான். ஒவ்வொரு முறையும் நான் அவனை அன்புடன் அணைத்துக்கொண்டு, 'அது ஒரு காகம், மகனே' என்று பதிலளித்தேன்."
அதை வாசித்த மகன் கண்கலங்கி நின்றான்.

நமது பெற்றோரின் அளவற்ற பொறுமைக்குள் நாம் வளர்ந்தோம். ஒரே கேள்வியைப் பலமுறை கேட்டோம். ஒரே தவறை மீண்டும் செய்தோம். நடக்கக் கற்றுக்கொண்டபோது விழுந்த ஒவ்வொரு முறையும் அவர்கள் நம்மைத் தூக்கினார்கள். நோயுற்ற போது தூங்காமல் நம்மைப் பராமரித்தார்கள். இன்று அவர்கள் மெதுவாக நடக்கும்போதும், மறதியால் ஒரே கேள்வியையோ கதையையோ மீண்டும் கூறும்போதும், நமது பொறுமைக்குள் வாழும் உரிமை அவர்களுக்கு இருக்கிறது.

"உன் தந்தையையும் தாயையும் மதித்து நட" (விடுதலைப் பயணம் 20:12) என்ற இறைக்கட்டளை குழந்தைப் பருவத்துடன் முடிவடைவதில்லை. பெற்றோர் முதுமையடைந்து நம்மைச் சார்ந்திருக்கும்போது தான் அந்தக் கட்டளை இன்னும் ஆழமான பொருளைப் பெறுகிறது. அவர்களுடைய வலிமைக்காக மட்டுமல்ல, அவர்களுடைய பலவீனத்திலும் அவர்களை மதிக்க நாம் அழைக்கப்படுகிறோம்.

### முதியவர்கள் சுமைகள் அல்ல, ஆசீர்

நவீன உலகம் மனிதர்களின் மதிப்பை அவர்களது வருமானம், உடல் வலிமை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் அளவிடுகிறது. ஆனால் கிறிஸ்தவ நம்பிக்கை முற்றிலும் வேறுபட்ட பார்வையை வழங்குகிறது. மனித மாண்பு ஒருவர் என்ன செய்கிறார் அல்லது எவ்வளவு உற்பத்தி செய்கிறார் என்பதில் அமைந்திருக்கவில்லை. ஒவ்வொருவரும் இறைவனின் சாயலில் படைக்கப்பட்டு, அவரால் அன்பு செய்யப்படுகின்றனர் என்பதில்தான் அது நிலைத்திருக்கிறது.

எனவே முதியவர்களைப் பராமரிப்பது வெறும் இரக்கச் செயல் அல்ல. அது நீதியின் செயல், நன்றியுணர்வின் வெளிப்பாடு, நமது நம்பிக்கையின் நடைமுறைச் சாட்சி. பெற்றோரின் முதுமைக் காலத்தில் அவர்களைப் புறக்கணித்துவிட்டு, நமது பிள்ளைகளுக்கு அன்பையும் நன்றியையும் கற்றுக்கொடுக்க முடியாது.

மருத்துவ வசதிகளை ஏற்பாடு செய்வது, மருந்துகளை வாங்கிக் கொடுப்பது, மருத்துவமனைக்கோ ஆலயத்திற்கோ அழைத்துச் செல்வது போன்றவை அவசியமானவை. ஆனால் நாம் அவர்களுக்கு வழங்கக்கூடிய மிகப் பெரிய பரிசு பல நேரங்களில் நமது நேரமும் பொறுமையான உடனிருப்பும்தான். அவர்கள் பணத்தை மட்டும் எதிர்பார்ப்பதில்லை. நமது முகம், குரல், அருகாமை மற்றும் அன்பான தொடுதலையும் விரும்புகின்றனர்.

தொழில்நுட்பம் தொலைவில் இருப்பவர்களுடன் பேசுவதற்கு உதவுகிறது. ஆனால் ஒரு தொலைபேசி அழைப்பு, அருகில் அமர்ந்து கையைப் பிடிப்பதையும் ஒன்றாக உணவு உண்பதையும் முழுமையாக ஈடுசெய்ய முடியாது. மனித இதயத்திற்கு உண்மையான அருகாமை எப்போதும் தேவைப்படுகிறது.

### திருச்சபையின் அன்னைக்குரிய பொறுப்பு

நோய் அல்லது உடல் பலவீனம் காரணமாக முதியவர்களால் பங்கு வாழ்வில் பங்கேற்க முடியாவிட்டால், பங்குத்தளமே அவர்களைத் தேடிச் செல்ல வேண்டும். முதியவர்களுக்காகச் சிறப்புத் திருப்பலி நிறைவேற்றுவதுடன், தனியாக வாழ்பவர்களையும் நோயுற்றவர்களையும் நேரில் சென்று சந்திப்பது அவசியம்.

முதியவர்கள் திருப்பலியில் பங்கேற்பதற்குப் போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்யலாம். வீட்டை விட்டு வெளியே வர முடியாதவர்களுக்கு நற்கருணையையும் ஒப்புரவு அருளடையாளத்தையும் கொண்டு செல்லலாம். மருத்துவமனைகளிலும் முதியோர் பராமரிப்பு இல்லங்களிலும் இருப்பவர்களைச் சந்திக்கலாம். இளைஞர்கள் அவர்களுடன் செபித்து, அவர்களது வாழ்க்கை அனுபவங்களைக் கேட்டு, அவற்றைப் பதிவு செய்யலாம்.

முதியவர்களை மேய்ப்புப்பணியைப் பெறுபவர்களாக மட்டும் கருதக்கூடாது. அவர்கள் திருஅவையின் பணியில் தொடர்ந்து பங்கெடுக்கக்கூடியவர்கள். இளம் குடும்பங்களுக்கு ஆலோசனை வழங்கலாம் குழந்தைகளுக்குச் செபங்களைக் கற்றுக்கொடுக்கலாம் பங்குத்தளத்தின் வரலாற்றைப் பகிர்ந்துகொள்ளலாம் குடும்பங்களுக்காகவும் உலக அமைதிக்காகவும் பரிந்து பேசலாம். அவர்களது அமைதியான செபமும் உறுதியான நம்பிக்கையும் திருச்சபையின் ஆற்றல்மிக்க மறையுரையாக அமைய முடியும்.

### நமது சமூகத்திற்கான சிறப்பு அழைப்பு

போர், பொருளாதார நெருக்கடி, இடப்பெயர்வு மற்றும் புலம்பெயர்வு காரணமாக யாழ்ப்பாண மறைமாவட்டத்திலும் நமது தமிழ்ச் சமூகத்திலும் பல முதிய பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் பிரிந்து வாழ்கின்றனர். (தொடர்ச்சி 6ம் பக்.)

# புனிதமான நற்கருணையைத் தகுதியோடு பெற்றுக் கொள்வோம்

**இ.அ.அமலரட்ணம்**




## முகவுரை:

கிறிஸ்தவராகிய எமக்கு இறைமகன் இயேசுவின் புனிதமான உடலும் தூய இரத்தமும் இரண்டறக் கலந்த திவ்விய நற்கருணை எமது கிறிஸ்தவ வாழ்வின் மையமாகவும், ஊற்றும் உறைவிடமாகவும் விளங்குகின்றது. நாம் உயிர்வாழ உண்ணும் உணவு சமிபாடடைந்து, அதன் சத்துக்கள் அகத்துறிஞ்சப்பட்டு எமது ஒவ்வொரு குருதிக் கலங்களிலும் இரண்டறக்க லந்து, எமது உடலுக்கு சக்தியைத் தருகிறது. அதுபோல நாம் உட்கொள்ளும் திவ்விய நற்கருணையும் எமது ஆன்மீக உணவாக இருப்பது மட்டுமல்ல, புனித வாழ்வு வாழ்வதற்கான அருள்வளங்களையம் நிலை வாழ்வை நோக்கிய பயணத்திற்கான ஆன்மீக பலத்தையும் தருகின்றது.

நாம் உண்ணும் உணவு நமது உடலில் சேர்வது போல நாம் உண்ணும் புனிதமான நற்கருணையால் இயேசுவும் எம்மோடு ஒன்றாக இணைகின்றார். நற்கருணை இயேசுவின் உயிருள்ள உடல் என்பதுதான்நமது ஆழமான நம்பிக்கையாக உள்ளது.

## நற்கருணையில் இயேசுவைக் காணவேண்டும்

இயேசு உயிர்த்த பின் பல இடங்களில் வெவ்வேறு நபர்களுக்குக் காட்சி கொ டுத்தார். குறிப்பாக எம்மாவு பாதையில் வழிநடந்த இரண்டு சீடர்களோடு சாதாரண வழிப்போக்கன் போல கூட நடந்து அவர்களோடு உரையாடுகின்றார். இறுதியில் மூவரும் பந்தியில் அமர்கின்றார்கள். "இயேசு சீடரோடு பந்தியில் அமர்ந்திருந்தபோது அப்பத்தை எடுத்து, கடவுளைப் போற்றிப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார். அப்போது அவர்கள் கண்கள் திறந்தன. அவர்களும் அவரை அடையாளம் கண்டு கொண்டனர். (லூக். 24:30-31) ஆன்மீக வாழ்வில் புனிதமாக இருந்து தகுதியான முறையில் நம்பிக்கையோடு நற்கரணையை உட்கொண்டால் எம்மாவு பாதையில் சீடர்களுக்குக் கிடைத்த இறைமகன் இயேசுவை சந்திக்கும் வாழ்ப்பும், அனுபவமும் எமக்குக் கிடைக்கும்.

## நற்கருணை கல்வாரிப் பலியின் நிறைவு

இயேசு தாம் பாடுபடுவதற்கு முன், தன்திருத்தூதர்களோடு இரவு உணவை அருந்துகின்றார். "இதை என் நினைவாகச் செய்யுங்கள்" (லூக் 22:19) என்று கூறி நற்கருணையை ஏற்படுத்தினார். இயேசுவின் புதுமைகளில் இரண்டு புதுமைகள் தனித்துவமானவை. கானாவூர்த் திருமணத்திலே ஆறுகுடம் சாதாரண தண்ணீரை இரசமாக மாற்றியது. (யோவான் 2:1-12) இயேசுவின் போதனைகளைக் கேட்க வந்த மக்கள் களைப்போடும், பசியோடும் இருந்தபோது ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் தனது இறைவல்லமையால் பலுகச் செய்து அவர்களின் பசியாற்றியது. இயேசு அப்பத்தைத் தனது திரு உடலாகவும், இரத்தமாகவும் கல்லமைகளின் உறைவிடமாகவும் எமக்குத் தருவதற்கான முன் அடையாளமாக இவ்விரண்டு புதுமைகளும் அமைகின்றன. கானாவூரில் தண்ணீர் இரசமானது. இராவுணவில் இரசம் இரத்தமாகியது. திபேரியாக் கடல் அருகில் இருந்த புல்வெளியில் அப்பம் பலுகியது. இராவுணவில் அப்பம் இயேசுவின் உடலானது. கல்வாரிப் பலியின் நினைவாக நாளாந்தம் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படுகின்றன. நற்கருணை ஏற்படுத்தப்படுகிறது. நற்கருணையிலே இறை மகன் இயேசு எம்மத்தியில் உயிரோடு வாழ்கின்றார்.

## தகுதியான முறையில் நற்கருணை பெறவேண்டும்

நற்கருணை புனிதமானது என்றும் பரிசுத்தராக இருக்கின்ற கிறிஸ்து உயிருடன் இருக்கிறார். புனிதமற்ற நிலையில், பாவங்களோடு நாம் நற்கருணை பெறுவோமாக இருந்தால் மீண்டும் பாவம் செய்வதோடு இறைவனின் அருள் வளங்களையும் நிலைவாழ்வையும் இழந்து விடுவோம். "வாழும் தந்தை என்னை அனுப்பினார் நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல என்னை உண்போரும் என்னால் வாழ்வர்" (யோவா 6:57) எனவே நற்கரணை என்பது எமது திருஅவையின் நம்பிக்கையின் மையமாகத் திகழ்கின்றது. எவராவது தகுதியற்ற நிலையில் இருந்த அப்பத்தை உண்டால் அல்லது ஆண்டவரின் கிண்ணத்தில் பருகினால் அவர் ஆண்டவரின் உடலுக்கும் இரத்தத்திற்கும் எதிராகக் குற்றம் புரிகிறார். எனவே ஒவ்வொருவரும் தமமையே சோதித்து அறிந்த பின்னரே இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்தில் பருகவேண்டும். (1கொரி 11:27-28). தகுதியற்ற நிலை என்பதை உண்மையில் உணர்ந்தால் ஒப்புரவு அருட்சாதனம் பெற்ற பின்னரே நற்கருணையைப் பெறவேண்டும்.

## நற்கருணையால் நான் மாறவேண்டும்

இறைமகன் இயேசுவைச் சந்தித்த பலர் மனமாற்றம் பெற்று, புது மனிதர்களாக மாறியதோடு இயேசுவின் சீடர்களாகவும் பயணித்தார்கள். நானும் நற்கருணை வழியாக இயேசுவைச் சந்திக்கிறேன். அந்த அனுபவம் என்னைப் புது மனிதனாக மாற்றுகின்ற அழகான அனுபவம் என்னில் நிகழவேண்டும். இயேசுவைச் சந்தித்த வரி தண்டுபவனாக, பாவியாக இருந்த சக்கேயு மனம் திரும்புகிறான். அவனின் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன. புது மனிதனாக மாறுகின்றான். அத்தோடு, இயேசுவின் தரிசனம் அவனது வீட்டுக்குக் கிடைக்கின்றது. (லூக் 19:1-10) சமாரியப் பெண் இயேசுவை கிணற்றடியில் சந்திக்கின்றான். இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருக்குச் சாட்சியாக மாறுகின்றான் (யோவா 4: 1-42) இயேசுவை லாசரின் சகோதரிகள் சந்திக்கிறார்கள். இலாசர் உயிர் பெறுகின்றான் (யோவா 11: 38-44) ஆண்டவரின் மேலுடையின் ஓரத்தை நான் தொட்டால் நலமடைவேன் என்ற நம்பிக்கையோடு தொட்ட பெரும்பாடுள்ள பெண் நலமடைந்தாள் (லூக் 8:43 - 48) அவரைச் சூழ்ந்து கொண்டிருந்த மக்களில் எத்தனை பேர் இயேசுவைத் தொட்டிருப்பார்கள். அவளின் தொடுகை நம்பிக்கையோடு இருந்தது. இயேசுவும் நல்லமையை வெளிப்படுத்தினார். இயேசு தூயவர், வல்லமை மிக்கவர், நாமும் நற்கருணையைப் பெறும்போது எனக்குள்ளே வருகின்றார். என்னைத் தொடுகின்றார். எனவே நானும் மாறவேண்டும். புது மனிதனாக இயேவின் சீடனாக புதுப்பிறப்படைய வேண்டும்.

## நிறைவாக

இயேசுவின் பாதம் கழுவிய தாழ்ச்சியின் அடையாளமாக நாம் வாழவேண்டும். இறைவன் முன் நாம் அனைவரும் தகுதியற்றவர்கள். தூசிக்குச் சமமானவர்கள். நற்கருணையைப் பெறுவதற்குமுன் நூற்றுவர் தலைவன் பணிவோடு சொன்னது போல " நீர் என் வீட்டிற்குள் அடியெடுத்து வைக்க நான் தகுதியற்றவன். உம்மிடம் என்னைத் தகுதியுள்ளவனாக நான் கருதவில்லை (லூக் 7:7) என்று நாம் கருதவேண்டும். இவ்வுலகில் இயேசுவின் வல்லமை உள்ள பிரசன்னம் இருப்பது நற்கருணையில் தான் என்பதை விசுவசிக்க வேண்டும். "திவ்விய நற்ககருணை மாந்தர் அனைவருக்கும் ஒளியாய் அமைந்துள்ள மாபெரும் மறையுண்மை ஆகும் என்றும், "திவ்விய நற்கருணை மாபெரும் அற்புதம்" என்றும் புனித திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் கூறுகின்றார். எனவே நற்கருணையின் புனிதத் தன்மையை மதித்து வணக்கம் செலுத்தி, ஆராதனை செய்து வாழ்வோம்.

---




# என் கேள்விக்கென்ன பதில்!

**அருட்பணி செ. அன்புராசா**

(சுரேஸ், யாழ்ப்பாணம்)

**கேள்வி: இன்று பலர் எவ்விடத்தில் என்ன பேசவேண்டும் என்று தெரியாதவர்களாக இருக்கிறார்கள். சில படித்தவர்கள், சமூகத்தில் பொறுப்பு நிலைகளில் இருப்பவர்கள்கூட படுபிழை விடுகிறார்கள். இவர்களுக்கு நல்லாலோசனை கூறலாமே!?**

**பதில்:** சுரேஸ், கொஞ்ச நாட்களுக்கு முன்பு, ஒரு விழாவில் கலந்து கொண்டிருந்தேன். குறிப்பிட்ட ஒருவரின் உரை முடிந்ததும் என்னிடம் பயபக்தியாக வந்த ஒருவர், "பொது வெளியில் எப்படிச் பேச வேண்டும் என்பதைப் பற்றிக் கொஞ்சம் எழுதுங்களன்! படித்திருந்தும் முட்டாள் தனமாகப் பேசுகிறார்களே!" எனத் தம் மனக் குமுறலை வெளிப்படுத்திச் சென்றார். பதிலுக்கு நான், "அவர்கள் அறியாமல் செய்கிறார்கள். அவர்களை மன்னியுங்கள்!" என்று கூறிச் சிரித்துவிட்டு வந்துவிட்டேன். மேற்சொன்ன நபரின் குறிப்பைப் பற்றிய என் கருத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டுமென பல தடவைகள் சிந்தித்திருந்தேன். மேலே குறிப்பிட்ட நபர் கூறிய கூற்றாலும், அண்மை நாட்களில் இதேபோன்று நடந்த சில சம்பவங்களாலும் மேற்குறித்த விடயம் பற்றி, விரைவாக எழுத வேண்டிதாய் ஆயிற்று. நூல் வெளியீடு, இறுவட்டு வெளியீடு, கலைவிழா, யூபிலி விழா, மதிப்பளிப்பு விழா எனப் பல நிகழ்ச்சிகளில் மிக நீண்ட காலமாகவே கலந்துகொள்ளும் அல்லது கலந்துகொண்டு உரையாற்றும் வாய்ப்புக் கிடைத்து வருகிறது.

இந்நிகழ்ச்சிகளில் பெருந்தொகையான மக்கள் கலந்து கொள்வதையும், பல தரப்பட்டவர்கள் உரையாற்றுவதையும் அவதானித்தும் வந்திருக்கிறேன். உரையாற்றுபவர்கள், இவ்வாய்ப்புகளைப் பயன்படுத்தி மக்களுக்கு நற்சிந்தனைகளை விதைக்க வேண்டும் என அடிக்கடி எனக்குள் நான் நினைத்துக் கொள்வதுண்டு. பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் உரையாற்றுபவர்களில் சிலர் எப்படிப் பேசவேண்டும், என்ன பேசவேண்டும், எவ்வாறு பேசவேண்டும் எனத் தெரியாதவர்களாக இருப்பதை அவர்களின் உரைகளை வைத்தே கணித்துவிடலாம். இந்நிலை, உரையாற்றுபவர்களின் அறியாமையையே காட்டி நிற்கிறது. உண்மையில், இப்படிப்பட்ட சபைகளில் சந்தர்ப்பங்களில் எப்படி உரையாற்ற வேண்டும் - என்ன பேசவேண்டும் என்பதைத் தமிழ் மரபில் 'இடம் பொருள் ஏவல்' என்பார்கள். 'இடம் பொருள் ஏவல்' என்றால், குறிப்பிட்ட ஒரு சூழலில், எவ்வாறு நடந்து கொள்ளவேண்டும் - எவ்வாறு உரையாற்ற (பேச) வேண்டும் என்பதைக் குறித்துக் கூறும் ஒரு மரபாகும்.

இடம் என்பது, ஒருவர் உரையாற்றும் குறிப்பிட்ட ஒரு சூழலைக் குறிக்கிறது. அச்சூழல் பல சந்தர்ப்பங்களில் முற்றுமுழுதாக வேறுபட்டவையாக இருக்கும்! உதாரணமாக, ஒரு கொண்டாட்டத்தில் ஒருவரை வாழ்த்தி உரையாற்ற வேண்டி இருக்கும் - ஒருவரின் இறுதி அஞ்சலி நிகழ்வில் அஞ்சலியுரை ஆற்ற வேண்டியிருக்கும் - ஒரு நூலுக்கு விமர்சனத்தைச் செய்ய வேண்டியிருக்கும்- ஒரு பொது நிகழ்வொன்றில் - மறைநிகழ்வு ஒன்றில் பேசவேண்டி இருக்கும் - இன்னுமொரு நிகழ்வில் ஒருவரைப் பாராட்டிப் பேச வேண்டியிருக்கும். மேற்சொன்னவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூழலைக் கொண்டது. பொருள் என்பது, உரையாற்றப்படும் - பேசப்படும் விடயத்தை, அதாவது, உள்ளடக்கத்தைக் குறிக்கிறது. ஏவல் என்பது, குறிப்பிட்ட சூழலுக்கு ஏற்ப உரையாற்றுபவர் மேற்கொள்ளும் செயலை அல்லது கட்டளையைக்(ஏவல்) குறிக்கிறது. இவற்றைக் கருத்தில்கொள்ளாது, வாய்க்கு வந்தபடி பேசினால், வாயைக் கொடுத்து சூத்தைப் புண்ணாக்குவதாய் ஆகிவிடும் என்பதைச் சிலர் எண்ணிப் பார்ப்பதில்லை. யாரும் விதிவிலக்கில்லாமல், பல திறத்தாரும்

(தொடர்ச்சி 7ம் பக்.)




# நம்மை வசப்படுத்தும் எண்ண வகைகள்

வகை வகையான உணவுகள் சாப்பிட நமக்கு ஆசை அதிகம். வகை வகையான எண்ணங்களை அதே ஆர்வத்தோடு அணுக முடியுமா? முடியாது. எண்ணங்களின் வகைகள். அவை ஏற்படுத்தும் விளைவுகள் அதிகம். ஒருசில உணவுகள் ஒரு சிலருக்கு எப்படி ஒவ்வாதோ அதேபோல, எனது எண்ணங்கள் பிறருக்கு ஒவ்வாமல் போகும்.

மனிதனின் எண்ணங்களால்-தான் அவனது உணர்வுகள், செயல்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கையின் தரம் நிலைநிறுத்தப்படுகிறது. மனத்தில் தோன்றும் ஒவ்வோர் எண்ணமும் நல்லதோ, கெட்டதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, நம் வளர்ச்சிக்குத் தேவையான எண்ணங்களை வளர்ப்பது மிகவும் அவசியம்.

ஒரு மனிதனின் வாழ்க்கையை மாற்றக்கூடிய மிகப்பெரிய ஆற்றல் அவனுடைய எண்ணங்கள் தான். நம் வாழ்க்கையில் நடக்கும் ஒவ்வொரு செயலுக்கும் அடிப்படைக் காரணம் நமது எண்ணங்கள்தான். நாம் இன்று இருப்பதற்குக் காரணம், நேற்று நாம் நினைத்த எண்ணங்களே. இப்படி வரையறை இல்லாமல் வகை வகையாக எண்ணங்களின் அவசியம், அது தரும் தாக்கம் பற்றிக் கூறிக்கொண்டே போகலாம்.

எண்ணங்களை நாம் கவனமுடன் கையாண்டால் அதன் பலன் அதிகம். இல்லையென்றால் பின்விளைவுகள் நம்மைப் புரட்டியெடுக்கும். அறிவியல் தரவுகளின் அடிப்படையில் ஒரு நாளைக்கு நமக்குள் 50,000 முதல் 70,000 எண்ணங்கள் வந்து போகும் என்க கூறப்படுகிறது. அதை ஒரு மணி நேரத்திற்கு என்று பார்த்தால். சுமார் 300 முதல் 3,000 எண்ணங்கள் வரை இருக்கலாம். தூக்கம். உணவு மற்றும் இன்னும் சிலவற்றைத் தாண்டி, ஒரு நாளைக்கு 16,500 எண்ணங்கள் நம் மனத்தில் தோன்றுகின்றன. இவை நாம் மனத்தில் எப்பவோ பதுக்கித் தேக்கி வைத்ததன் வெளியீடுதாம்.

இப்படித் தோன்றும் எண்ணங்கள் பல வகைகளில் அடங்கும். அவற்றை நாம் நான்கு மிகப்பெரிய எண்ண வகைக்குள் அடக்கிவிடலாம். அவை:

**1.நேர்மறை எண்ணங்கள்**
(Positive Thoughts)
**2. எதிர்மறை எண்ணங்கள்**
(Negative Thoughts)
**3. பகுத்தறிவு எண்ணங்கள்**
(Critical Thoughts)
**4.தேவையற்ற எண்ணங்கள்**
(Waste and Unwanted Thoughts).

### 1. நேர்மறை எண்ணங்கள்
(Positive Thoughts)

மனதில் செயல்கள் மீதான ஆர்வம், தன்னம் பிக்கை, மகிழ்ச்சி மற்றும் நல்ல எதிர்பார்ப்புகளை உருவாக்கும் எண்ணங்கள் நேர்மறை எண்ணங்கள் ஆகும். தன்னம்பிக்கையை அதிகரித்து, அழுத்தத்தைக் குறைத்து, சவால்களைத் துணிவுடன் எதிர்கொள்ள உதவுகின்றன. நல்ல உறவுகளை உருவாக்கி, வாழ்க்கையில் முன்னேற முழு ஊக்கத்தை இந்த நேர்மறை எண்ணங்கள் தருகின்றன. எல்லா நேரமும் நேர்மறை எண்ணங்களால் மட்டுமே ஒருவர் நிறைந்து இருக்க முடியாது. ஆனால், பெரும்பாலான தருணங்களில் இப்படி இருப்பது நல்லது.

### 2. எதிர்மறை எண்ணங்கள்
(Negative Thoughts)

பயம், தோல்வி சந்தேகம். விரக்தி, பெருங்கோபம் போன்றவற்றை மையயாகக் கொண்டரண்ணங்கள் எதிர்மறை எண்ணங்கள். உணர்ச்சி சார்ந்த எண்ணங்கள், பயம் சார்ந்த எண்ணங்கள் (Feut-Based Thoughts) இதில் அதிகம் அடங்கும். இது மன அழுத்தம் மற்றும் கவலையை அதிகரித்துத் தன்னம்பிக்கையைக் குறைக்கும் முடிவெடுக்கும் திறன் பாதிக்கப்படும் உறவுகளில் விரிசல் ஏற்படும். உடய தலத்திலும் பாதிப்பு ஏற்படும்.

கோபம், துக்கம், கண்டுகொள்ளப்படாத அன்பு, பயம் போன்ற உணர்வுகளால் உருவாகும் எண்ணங்கள் இவை. இதனால் உருவாகும் கட்டுப்பாடற்ற உணர்ச்சிகள் தவறான முடிவுகளுக்கு வழிவகுக்கும். மன நிலையையும் நடத்தையையும் பாதிக்கும். தயக்கம் மற்றும் தள்ளிப்போடும் பழக்கம் உருவாகும். தன்னம்பிக்கை குறையும். நல்ல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும்: மன அமைதி பாதிக்கப்படும். ஆனால், அளவான பயம் எச்சரிக்கையுடனும் பொறுப்புடனும் செயற்பட உதவும்.

### 3.பகுத்தறிவு எண்ணங்கள்
(Critical Thoughts)

நம்மைச் சுற்றி நடக்கும் நிகழ்வுகளுக்கு எளிதில் உணர்ச்சிவசப்படாமல். உண்மைகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் ஆராய்ந்து சிந்திப்பது பகுத்தறிவு எண்ணங்களாகும். இது நமக்கான சரியான முடிவு-களை எடுக்க உதவும். தவறான நம்பிக்கைகளைத் தவிர்த்து, தலைமைத்துவத் திறனை வளர்த்து, பொறுப்பான செயற்பாட்டை உருவாக்கும். புதிய சிந்தனைகள் புதுமையான அணுகுமுறைகள் மற்றும் கற்பனைத் திறனை வெளிப்படுத்தும் எண்ணங்களாக இவை அறியப்படுகிறது. இவை நமக்குள் நன்றாக இருக்கும்போது, புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமைகள். உருவாகும். பிரச்சினைகளுக்குப் புதிய தீர்வுகள் கிடைக்கும். தனித்துவமான சிந்தனை வளர்ச்சி அடையும்,

### 4. தேவையற்ற எண்ணங்கள்
(Waste und Unwanted Thoughts)

பிரச்சினைகளைப் பற்றி மட்டுமே சிந்தித்துச் சிக்கலுக்கான தீர்வுகளைத் தேடும் எண்ணங்களை ஆக்கபூர்வமாகப் பழைய நிகழ்வுகளையே மீண்டும் மீண்டும்




அசைபோட்டு அசை போட்டு, நேரத்தையும் மனத்தையும் பாழ்படுத்துவதுதான் இவ்வகை எண்ணங்கள். செயல்திறன் குறைந்து, புதிய வாய்ப்புகள் எதையும் சிந்திக்காமல் வெறுமனே வாழ்க்கையைக் கழிப்பது தான் இதன் நோக்கமாகும். இந்த எண்ண வகையில் நாம் மிகவும் தீவிர கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால், நம்மை நாள் முழுக்க ஏதோவேலைசெய்த உணர்விலேயே இவ்வகை எண்ணங்கள் வைத்திருக்கும். ஆக்கபூர்வமான எந்த முடிவும் இதில் இருக்காது. ஒரு கட்டத்தில் நம்மையே முழுவதும் வெறுக்கும் நிலைக்குத் தள்ளி, விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வைத்துவிடும்.

நாம் எல்லா எண்ணங்களையும் கட்டுப்படுத்த முடியாது. சூழல் மற்றும் நம் மனநிலை சார்ந்து அது மாறுபடும். ஆனால், எந்த எண்ணத்தை வளர்க்க வேண்டும் என்பதை நாம் முடிவு செய்ய முடியும். அதை வளர்த்தெடுப்பதன் மூலம் நம் வாழ்க்கையையும் வளர்த்தெடுக்க முடியும், “எனக்கு ஏன் இது நடந்தது?“ என்று கேட்பதற்குப் பதிலாக, “இதை எப்படிச் சரிசெய்வது?“ என்று எண்ணுவதன் மூலம் நமது எண்ணங்கள் சீர் செய்யப்படும்.

எப்படி ஒரு சிற்பி கல்லில் உள்ள தேவையற்ற பகுதிகளை நீக்கியதும் அழகுமிகு சிற்பம் கிடைக்கிறதோ அதுபோல, நம் மனத்தில் குப்பையெனத் தேங்கிக்கிடக்கும் தேவையற்ற எண்ணங்களை முதலில் தூக்கிப் போட்டு, அந்த வெற்றிடத்தை நல்ல எண்ணங்கள் மூலம் நிரப்பி, நல் வாழ்வைத் தேர்ந்தெடுப்போம்.

நல்ல எண்ணங்கள், நல்ல செயல்கள், நல்ல பழக்கங்கள், நல்ல குண நலன்கள், நல்ல வாழ்க்கை... இவ்வரிசையை அடிக்கடி நினைவில்கொள்வோம்.

“உலகம் மாறுகிறதோ இல்லையோ, உங்கள் எண்ணங்களை மாற்றுங்கள் உங்கள் உலகமே மாறும்.“

மனிதனின் எண்ணங்களால்தான் அவனது உணர்வுகள், செயல்கள், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கையின் தரம் நிலைநிறுத்தப்படுகிறது. மனத்தில் தோன்றும் ஒவ்வோர் எண்ணமும் நல்லதோ, கெட்டதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எண்ணங்களைச் சரியாகப் புரிந்துகொண்டு, நம் வளர்ச்சிக்குத் தேவையான எண்ணங்களை வளர்ப்பது மிகவும் அவசியம்.

# க.பொ.த.சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் வினாப்பத்திரம் - 05

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. எகிப்தின் மீது வரவழைக்கப்பட்ட பத்துப் பெருந் துன்பங்களுள் இறுதியான துன்பம்.
1. கொசுக்கள் பெருக்கம் 2. தலைமகன் சாவு
3. காரிருள் 4. கல்மழை

02. எகிப்திலிருந்து இஸ்ரயேலை மீட்டுவர இறைவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்.
1. மோசே 2. பார்வோன் 3. யோவான் 4. பிலிப்பு

03. இயேசுவின் இறுதி இராவுணவில் பாதம் கழுவும் நிகழ்வைப் பற்றிக் கூறும் நற்செய்தி நூல். 1. மத்தேயு 2. மாற்கு 3. யோவான் 4. லூக்கா

04. நற்கருணையைப் பெறுவதற்கு செய்ய வேண்டிய ஆன்மீக ஆயத்தம்.
1. தண்ணீர் அருந்தக் கூடாது 2. உணவு உண்ணக்கூடாது
3. பாவத்திலிருந்து விடுபடல் 4. நேர்மனதுடன் வாழ்தல்

05. இயேசுவின் பாஸ்காப் பலியை எவ்வாறு நாம் நினைவு கூருகின்றோம்.
1. திருப்பலியின் மூலம் 2. பகிர்ந்து உண்ணுவதன் மூலம்
3. ஏழைகளுடன் வாழ்வதன் மூலம் 4. பாதம் பணிவதன் மூலம்

06. இஸ்ராயேலரின் வழிபாடுகளில் பிரதான செயற்பாடு.
1. உணவு உண்ணுதல் 2. பலி செலுத்துதல் 3. உதவுதல் 4. செபித்தல்

07. பலிக்காக இஸ்ரயேல் மக்கள் பயன்படுத்திய பலிப்பொருட்கள்.
1. உடைகள் 2. புத்தகங்கள் 3. தானியவகைகள் 4. காசுகள்

08. "அவர் பலியாகப் படைத்த இரத்தம் வெள்ளாட்டுக் கிடாய்கள், கன்றுக்குட்டிகள் ஆகியவற்றின் இரத்தம் அல்ல அவரது……." இடைவெளிக்குப் பொருத்தமான சொல்.
1. செயல்கள் 2. கன்றுக்குட்டி 3. சொந்த இரத்தம் 4. பலிகள்

09. எரிபலிக்காகப் பயன்பத்தப்பட்டது.
1. காளைகள் 2. அப்பம் 3. தானியம் 4. உணவு

10. பழைய ஏற்பாட்டுப் பலிகள் முழுமையடைவது.
1. நல்லுறவின் மூலம் 2. பாவநிவாரணம் மூலம்
3. குற்றம் கழுவுதல் மூலம் 4. கிறிஸ்துவின் கல்வாரிப் பலியினால்

11. இளம் வயதில் பயங்கரமான வாகன விபத்திற்குள்ளாக்கப்பட்டு மருத்துவர் அதிசயிக்கும் வண்ணம் நலம் பெற்றவர்.
1. புனித மக்ஸிமிலியன் கோல்பே 2. 2ம் அருள் சின்னப்பர்
3. அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ 4. அன்னை திரேசா

12. புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் பயணம் செய்த நாடுகள்.
1. 129 2. 130 3. 200 4. 250

13. புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் இலங்கைக்கு வந்து அருளாளர் நிலைக்கு உயர்த்திய புனிதர்.
1. புனித அன்னை திரேசா 2. தேவசகாயம்பிள்ளை
3. வண. ஜோசவாஸ் அடிகள் 4. புனித மரியகொற்றி

14. அன்பின் கன்னியர் சபையை ஆரம்பித்தவர்.
1. 2ம் அருளப்பர் சின்னப்பர் 2. அருளாளர் அன்னை திரேசா
3. மைக்கல் றொட்றிக்கோ 4. புனித மக்ஸிமிலியன் கோல்பே

15. லோறற்றோ சபையில் இணைந்து கொண்டவர்.
1. அன்னை திரேசா 2. மக்ஸ்சிமிலியன் கோல்பே
3. 2ம் அருள்சின்னப்பர் 4. யோசவ்வாஸ் அடிகள்

16. புனித மக்ஸிமிலியன் கோல்பே இணைந்து கொண்ட குருமடத்தின் பெயர்.
1. சிறிய குருமடம் 2. பெரிய குருமடம்
3. கொன் வென் சுலஸ் பிரான்சிஸ்கன் குருமடம் 4. லோறற்றோ சபை

17. மரியாயின் மாசற்ற இருதய சேனை சபைக்கு உதவிய பத்திரிகையின் பெயர்.
1. போர் வீரன் 2. இருதய சேனை 3. மாசற்ற சேனை 4. லங்காதீபம்

18. உடலில் விசமேற்றிக் கொல்லப்பட்டவர் யார்?
1. 2ம் அருள் சின்னப்பர் 2. மைக்கல் றொட்றிகோ
3. இறைநம்பிக்கையாளர் 4. மக்ஸிமிலியன் கோல்பே

19. பதுளை மறைமாவட்டத்தில் அருட்பணி றொற்றிக்கோ அவர்களால் உருவாக்கப்பட்ட அமைப்பின் பெயர்.
1. பீற்றர் கல்லூரி 2. புனர்வாழ்வு மையம் 3. சுபசெதெகர 4. இறை

20. அருட்பணி மைக்கல் றொட்றிக்கோ அடிகளார் எந்தத் துறவற சபையைச் சேர்ந்தவர்
1. பிரான்சிஸ்கன் சபை 2. அமலமரித்தியாகிகள் சபை
3. இயேசு சபை 4. அங்கிலிக்கன் சபை

21. குணமளிக்கும் அருளடையாளம் வழியாகக் கிடைக்கும் கொடை.
1. ஆன்மீக உடல் நலன் 2. திருச்சபையில் அங்கத்துவம்
3. தூய ஆவியின் திடம் 4. குடும்ப வாழ்வு

22. நோயில் பூசுதல் அருளடையாளத்தை 'தூய பூசுதல் என்று அறிமுகப்படுத்தியவர்.
1. 2ம் அருளப்பர் சின்னப்பர் 2. மக்ஸிமிலியன் கோல்பே
3. திருத்தந்தை 6ம் சின்னப்பர் 4. யோசவ்வாஸ் அடிகள்

23. குருத்துவத்தின் முழு நிறைவு நிலை எது.
1. திருத்தந்தை 2. குரு 3. தியாக்கோன் 4. ஆயர்

24. மேலுடையைத் தொட்ட பெண்ணுக்கு இயேசு கூறியது.
1. நலமுடன் செல் 2. குருவிடம் காட்டும்
3. பிறருக்கு உதவி செய் 4. உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது

25. திருத்தூதர்களின் பிரதிநிதியாகத் திருஅவையின் தூதுரைப் பணியில் பங்கேற்பாளராக இருப்பவர்
1. குரு 2. தியாக்கோன் 3. ஆயர் 4. பொதுநிலையினர்

26. இறைமக்களின் ஆன்மீகத் தேவையை நிறைவு செய்தல், தம் மறைமாவட்ட ஆயரோடு இணைந்து பணியாற்றுதல் இவற்றுடன் தொடர்புடையவர்
1. குரு 2. ஆயர் 3. தியாக்கோன் 4. பொதுநிலையினர்

27. A - இறையழைப்பைப் பெற்றிருத்தல் வேண்டும்
B – திருமணம் செய்யாது தம் வாழ்வை இறைவனுக்கு அர்ப்பணித்தல்
C – கல்வியை விருப்புடன் கற்றல்
இக்கூற்றுக்களில் குருத்துவ அருளடையாளத்துடன் தொடர்புடையது.
1. A யும் C யும் 2. A யும் B யும் 3. B யும் C யும் 4. Cயும் B யும்

28. "பிள்ளைகள் ஆண்டவர் அருளும் செல்வம் மக்கட் பேறு அவர் அளிக்கும் பரிசில்" கூறப்பட்டுள்ள பகுதி.
1. எசாயா 2. மத்தேயு 3. திருப்பாடல் 4. மாற்கு

29. திருமணத்திற்கான சட்டபூர்வமான சாட்சி யார்?
1. தம்பதிகள் 2. ஆயர் 3. மக்கள் 4. குரு

30. திருமணத்தின் வெளி அடையாளம் எது?
1. மக்கள் 2. கணவன் 3. மனைவி 4. திருமண ஒப்பந்தம்

31. முறிந்த உறவு மீண்டும் கட்டியெழுப்பப்படுகின்றது. எந்த அருளடையாளத்தைப் பெறுவதன் மூலம்.
1. ஒப்புரவு 2. திருமுழுக்கு 3. நோயில் பூசுதல் 4. திருமணம்

32. ஒப்புரவு அருளடையாளத்தைக் குறிக்கும் வேறு பெயர்.
1. நோயில் பூசுதல் 2. மன்னிப்பின் அருளடையாளம்
3. நன்மையின் மருத்துவப் பணி 4. மன்னிப்பின் அருளடையாளம்

33. மன அமைதியையும், உடல் நலனையும் பெற்றுக் கொடுக்கும் அருளடையாளம்.
1. திருமணம் 2. நோயில் பூசுதல் 3. ஒப்புரவு 4. நற்கருணை

34. வழுவா வரம் உடையவர்.
1. ஆயர் 2. குரு 3. திருத்தொண்டர் 4. பொதுநிலையினர்

35. இறைவன் முன்னிலையில் உயர்ந்த ஓர் இணைப்பாக உள்ளது.
1. திருமுழுக்கு 2. நற்கருணை 3. திருமணம் 4. ஒப்புரவு

36. கத்தோலிக்க திருமணத்தை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு
1. பதிவு செய்தல் வேண்டும்
2. உதவி செய்தல் வேண்டும்
3. இருவரும் கத்தோலிக்கராக இருத்தல் வேண்டும்
4. பகிர்ந்து உண்ண வேண்டும்

37. சமூகப் பணிக்காக ஏற்படுத்தப்பட்ட அருளடையாளம் எது?
1. குருத்துவம் 2. நோயில் பூசுதல் 3. நற்கருணை 4. உறுதிப்பூசுதல்

38. கத்தோலிக்க திருமணத்தின் பண்பு
1. உதவுதல், செபித்தல் 2. செபித்தல், ஒருமை
3. ஒருமை, கட்டவிழாமை 4. கட்டவிழாமை, உதவுதல்

39. கத்தோலிக்க திருமணத்தில் சட்டரீதியான தடைகளில் எத்தனை வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
1. 18 வயதிற்கு குறையாதிருத்தல் 2. 40 வயது
3. 38 வயது 4. 23 வயது

40. உண்மையான மனம் வருந்துதலின் மறு பெயர்.
1. அன்பின் மனம் வருந்துதல் 2. பயத்தினால் மனம் வருந்துதல்
3. நேரிய மனம் வருந்துதல் 4. இரக்கத்துடன் மனம் வருந்துதல்

**விடைகள்**

| | | | |
|---|---|---|---|
| 1 - 2 | 11 - 2 | 21 - 1 | 31 - 1 |
| 2 - 1 | 12 - 1 | 22 - 3 | 32 - 2 |
| 3 - 3 | 13 - 3 | 23 - 4 | 33 - 2 |
| 4 - 4 | 14 - 2 | 24 - 4 | 34 - 1 |
| 5 - 1 | 15 - 1 | 25 - 3 | 35 - 3 |
| 6 - 2 | 16 - 3 | 26 - 1 | 36 - 3 |
| 7 - 3 | 17 - 1 | 27 - 2 | 37 - 1 |
| 8 - 3 | 18 - 4 | 28 - 3 | 38 - 3 |
| 9 - 1 | 19 - 3 | 29 - 4 | 39 - 1 |
| 10 - 4 | 20 - 2 | 30 - 1 | 40 - 1 |

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்
யாழ். மறைக்கல்வி நிலையம்.

## நமது நம்பிக்கையின்...

(...... ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளைகள் வெளிநாடுகளில் வாழ்ந்தாலும், பெற்றோருடன் தொடர்ச்சியாகப் பேசுவதற்கும் அவர்களது உடல், உள மற்றும் ஆன்மீகத் தேவைகளைக் கவனிப்பதற்கும் பொறுப்பான ஏற்பாடுகளைச் செய்வது அவசியம்.

நமது முதியவர்கள் போர், இடப்பெயர்வு, உறவுகளின் இழப்பு, தியாகம் மற்றும் இறைநம்பிக்கை பற்றிய ஏராளமான அனுபவங்களைச் சுமந்திருக்கின்றனர். அவர்களது கதைகளை இளைய தலைமுறை பொறுமையுடன் கேட்காவிட்டால், ஒரு தலைமுறையின் ஞானமும் ஆன்மீக நினைவுகளும் அவர்களுடன் மறைந்துவிடும். முதியவர்களைக் கேட்பது கடந்த காலத்திற்குத் திரும்பிச் செல்வதல்ல. எதிர்காலத்தை அதன் வேர்களுடன் இணைப்பதாகும்.

இந்த உலகத் தாத்தா, பாட்டிகள் மற்றும் முதியோர் தினம் ஒரு நாள் கொண்டாட்டமாக மட்டும் முடிந்துவிடக்கூடாது. நமது குடும்பத்திலுள்ள முதியவரை நேரில் சந்திப்போம் அல்லது தொலைபேசியில் அழைத்துப் பேசுவோம். அவர்கள் கூறும் கதைகளை அவசரமின்றிக் கேட்போம். தனிமையில் வாழும் முதியவருடன் அமர்ந்து உணவு உண்போம் அல்லது செபிப்போம். நமது குழந்தைகள் தாத்தா, பாட்டிகளுடன் நேரம் செலவிட வாய்ப்பளிப்போம். இறைவனிடம் சென்றடைந்த நமது முன்னோர்களுக்காகச் செபித்து, அவர்கள் நமக்குக் கொடுத்த நம்பிக்கை மரபைப் பாதுகாப்போம்.

நமது முதல் அடிகளை அவர்கள் தாங்கினார்கள் இன்று தடுமாறும் அவர்களது அடிகளை நாம் தாங்குவோம். குழந்தைப் பருவத்தில் நாம் கேட்ட எண்ணற்ற கேள்விகளுக்குப் பொறுமையுடன் பதிலளித்தார்கள் இன்று அவர்கள் மீண்டும் மீண்டும் கூறும் கதைகளை அன்புடன் கேட்போம். பாட்டி ரோசா திருத்தந்தை பிரான்சிஸின் உள்ளத்தில் விதைத்த சிறிய நம்பிக்கை விதை, உலகத் திருஅவைக்கே கனி தந்தது. அது போல நமது தாத்தா, பாட்டிகளின் செபங்களும் தியாகங்களும் அடுத்த தலைமுறைகளில் பெரும் கனிகளைத் தரலாம்.

தாத்தா, பாட்டிகள் கடந்த காலத்தின் மறைந்துபோகும் நினைவுகள் அல்லர். அவர்கள் நமது நம்பிக்கையின் வேர்கள், குடும்பத்தின் வாழும் வரலாறு, இறைவனின் நம்பகத்தன்மைக்குச் சாட்சியமளிக்கும் மனிதர்கள். எனவே நமது வேர்களை மதிப்போம் முதியவர்களை அரவணைப்போம் "நான் உன்னை ஒருபோதும் மறக்கமாட்டேன்" என்று இறைவன் கூறும் வார்த்தையை நமது அன்பான உடனிருப்பின் வழியாக உயிர்ப்பிப்போம்.

## பேறுபெற்றவர்:

அன்னை மரியா பெண்களில் பேறுபெற்றவர் மட்டுமல்ல. மானிடர் அனைவரிலும் பேறுபெற்றவர். நற்செய்தியில் பல இடங்களில் அனை மரியா பேறுபெற்றவர் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

• நம்பியதால் பேறுபெற்றவர், • இறைவனின் இரக்கத்தால் பேறுபெற்றவர், • இயேசுவை வளர்த்ததால் பேறுபெற்றவர், • இறைவார்த்தையைக் கடைப்பிடித்த தால் பேறுபெற்றவர், • தயக்கமின்றி ஏற்றுக்கொண்டதால் பேறுபெற்றவர், • கண்டதால் பேறுபெற்றவர், • காணாமலே நம்பியதால் பேறுபெற்றவர், • தந்தை வெளிப்படுத்தியதால் பேறுபெற்றவர், • மலைப்பொழிவு வாழ்வால் பேறுபெற்றவர்.

## என் கேள்விக்கென்ன பதில்?

(4ம் பக்கத் தொடர்ச்சி)

தரத்தாரும் இச்சோதனையில் வீழ்ந்துபோவதை பல சந்தர்ப்பங்களில் அவதானித்து இருக்கிறேன். பாவம், என்ன செய்வது!!! சில அடிப்படைகளை அறியவில்லை என்றால், உரையாற்றியே அவர்கள் தங்கள் மதிப்பைத் தாங்களே குறைத்துக் கொள்வார்கள். அநேகமாக அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்கள் அதிகாரத் திமிரை வெளிப்படுத்த முனையும்போது 'இடம் பொருள் ஏவல்' என்ற பண்பாட்டை இலகுவாகவே மறந்து போய்விடுவார்கள். உண்மையில், உரையாற்றுவது - பேசுவது என்பது ஒரு கலை. அதனை கற்றுப் பழக வேண்டும்! வில்லெடுத்தவன் எல்லாம் வேட்டைக் காரனாய் ஆகமுடியாது! இதனை வாசிக்கும்போது, உங்கள் வாழ்க்கையில், 'இடம் பொருள் ஏவல்' தெரியாமல் உரையாற்றியவர்களில் சிலர் உங்கள் நினைவுக்கு வரலாம்! உங்கள் நினைவுக்கு வந்த, அந்த நபர்களைப் பற்றித் தான் நான் எழுதுகிறேன் என்று நீங்கள் நினைத்தால், 'உண்மையிலும் உண்மையாகச் சொல்கிறேன்', அதற்கு நான் பொறுப்பாளி அல்ல!

*(அன்ரன், யாழ்ப்பாணம்)*

**கேள்வி: 'நம்மண்ணில் நடந்ததே நமது பிள்ளைகளுக்குத் தெரியிதில்ல' எனப் புலம்பும் பெற்றோருக்கு என்ன புத்திமதி கூறுவீர்கள்?**

**பதில்:** மறந்துபோவது மனத்துக்கு ஒருவகையில் நல்ல மருந்துதான். ஆனால், வரலாற்றை மறப்பதில் பொதுவாக நமக்குப் பிறகுதான் யாரும் என்ற நிலையில்தான் நமது மக்களின் நிலையிருக்கிறது! ஆனால், மாவீரர் நாள், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் போன்ற நிகழ்வுகள், கடந்த சில ஆண்டுகளாகப் பல்லாயிரக் கணக்கான மக்களால் நிறைந்திருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. மண்ணை, மக்கள் மறக்கவில்லை என்பதையே இப்படிப்பட்ட நிகழ்வுகளில் நிறைந்து வழியும் மக்கள்கூட்டம் எடுத்துக்காட்டி நிற்கிறது எனலாம். 'முள்ளிவாய்க்கால்' நினைவுகூரல் 2026ம் ஆண்டு முள்ளிவாய்க்கால் திடலில் நினைவுகூரப்படுவதோடு, பல்வேறுபட்ட இடங்களிலும், உள்நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் நினைவுகூரப்பட்டது சிறப்புக்குரியது.

அது நல்லது, தொடரப்பட வேண்டியது. இந் நிகழ்வில், மோட்டார் சைக்கிள்களில் பேரணியாக, மிகத் தூர இடங்களில் இருந்து, வீதி நெடுக ஒலியெழுப்பியபடி பயணித்து முள்ளிவாய்க்கால் நினைவிடத்திற்குச் சில குழுக்கள் வந்ததையும் காணக் கூடியதாக இருந்தது. வீதிப் போக்குவரத்து ஒழுங்குகளை மீறிநடத்தல், விபத்துக்களை ஏற்படுத்தக்கூடிய வகையில் பயணித்தல், வீதியெங்கும் பெரும் ஒலியெழுப்பிச் செல்லுதல், அதிக வேகமாக மோட்டார் சைக்கிள்கள், வாகனங்களைச் செலுத்துதல் போன்ற நடபடிக்கைகள் சாவடைந்த மக்களை நினைவுகூரும் அந்நாளுக்குரிய பண்பாடாக இருக்காது என்பது என் கருத்து! 'சோக்' காட்டுவதற்கும், 'விறுசு' காட்டுவதற்கும், 'எடுவை' எடுப்பதற்கும் இப்படிப்பட்ட நிகழ்வுகளை யாரும் பயன்படுத்துவது அழகில்லாதது மட்டுமல்ல, முற்று முழுதாகத் தவிர்க்கப் பட வேண்டும். மற்றையது, இப்படிப் பட்ட நிகழ்வுகளில் பங்கேற்றுவிட்டுச் சிலர் வெளிநாடுகளில் போய் நின்று, "இப்படிப்பட்ட நிகழ்வுகளில் நாங்கள் முன்நின்று செயற்பட்டதால் எம்மைத் தேடுகிறார்கள். அதனால், நாட்டில் நாங்கள் இருக்கமுடியாது, வாழ முடியாது!" என்று புலம்பெயர்ந்து சென்று புகழிடம் கோருவோரும் உண்டு! இதுதான், பச்சைச் சுயநலம்! இப்படிப்பட்ட நிகழ்வுகளை வைத்துத் தமது சொந்த நலன் தேடுவதும், இந்நிகழ்வுகளைப் பாவித்து இந்நாள்களில் நாட்டைவிட்டு வெளியேறிப் புகழிடம் கோருவதும் மனச்சாட்சிக்கு விரோதமான செயல்களாகும். இதனைச் செய்வதற்கு இப்படிப்பட்ட நிகழ்வுகளை பயன்படுத்துவது உண்மையில் வேதனைக்குரியது! அடுத்து, "எங்கட பிரச்சினைகளைப் பற்றி, நாங்கள் அனுபவிச்ச கஸ்ரங்களைப் பற்றி, ஏன் கடைசி யுத்தத்தைப் பற்றி எங்கட பிள்ளைகளுக்கு ஒன்றுமே தெரியாது!" என்று புலம்பும் பல பெற்றோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் மிக அதிக அளவில் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கலாம். நேரடியாகவே பலர் தங்கள் ஆதங்கங்களை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெற்றோரிடம் ஒரே ஒரு கேள்வியை மட்டும் எழுப்ப விரும்புகிறேன்! போர் மௌனிக்கப்பட்டு 17 ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் 'முள்ளிவாய்க்காலின் நிறம்' தெரியாத பெற்றோர்-வளர்ந்தோர் நம்மிடையே எத்தனை பேர்கள் உண்டு தெரியுமா? புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரம், மந்துவில், மாத்தளன், முள்ளிவாய்க்கால் பிரதேசம், நந்திக்கடல், வட்டுவாகல் பாலம் போன்ற இடங்களுக்குக் கூட்டிச்சென்று, 'இங்குதான் நமது உறவுகள் ஆயிரக்கணக்கில் பதுங்கு குழிகளுக்குள் இரவுபகலாக குடிக்கத் தண்ணீர் இன்றி, உண்ண உணவின்றி இருந்தார்கள், போட்ட குண்டுகளுக்கு மடிந்தார்கள், எஞ்சியோர் இங்கிருந்துதான் தப்பிப் பிழைத்து வந்தார்கள்' என்று எத்தனை பெற்றோர் தமது பிள்ளைகளுக்குக் கூறியிருக்கிறார்கள்? "இங்குதான் உன் மாமன், உன் பெரியப்பா, உன் சித்தப்பா, உன் அண்ணன், உன் அக்கா, உன் அத்தை, நமது போராளிகள் தமது இன்னுயிரை ஈந்தார்கள்.!' என்று தங்கள் பிள்ளைகளை இவ்விடங்களுக்கு ஒருதடவை அழைத்துச் சென்று காட்டியிருக்கிறார்கள் - காட்டி, விளக்கம் கொடுத்திருக்கிறார்கள்! முள்ளிவாய்க்கால் பக்கம் போகவேண்டும் என்றல்ல, போகாவிட்டால் பரவாயில்லை, ஆனால், அவ்விடங்களுக்குப் போய் உங்கள் பிள்ளைகளுக்கு நடந்தவற்றைக் கூறாமல் 'அவர்களுக்கு ஒன்றும் தெரியாது' என்று தயவுசெய்து புலம்பித் திரியாதீர்கள்! பாவம் நமது பெற்றோர், குறிப்பாகத் தாய்மார்! பிள்ளைகளை 'ரீயுசன்'க்கு 'ஸ்கூட்டி'யில் நாளும் பொழுதும், இரவும் பகலும், மாறிமாறி ஏற்றி இறக்குவதிலேயே அவர்களின் ஆயுள் முடிந்து போகையில், கடந்த கால வரலாற்றை எடுத்துரைக்கும் இப்படிப்பட்ட இடங்களுக்குக் கூட்டிச்சென்று காட்டுவதற்கு அவர்களுக்கு எங்கே நேரம் கிடைக்கப் போகிறது? 17 ஆண்டுகளில் ஒரு நாள்கூடக் கிடைக்கவில்லையா என்று சிலர் கேட்கலாம். கேட்கலாம், பதில் சொல்லவேண்டுமே! பிள்ளைகளுக்குப் புரியவைக்கக்கூடிய வகையில் புரியவைக்காமல் 'இவங்களுக்கு ஒன்றும் தெரியாது, இக்காலத்துப் பிள்ளைகளுக்கு ஒரு மண்ணும் விளங்குதில்ல, நம்மண்ணில் நடந்ததே நமது பிள்ளைகளுக்குத் தெரியிதில்ல' என்று புலம்பித் திரியும் பெற்றோரை என்ன செய்யலாம்!? "இப்படியானவர்களுக் குப் பச்சைப் பனைமட்டை அடிதான் சரி" என்றார் ஒருவர்!

## மாமன்றப் பயணத்தை

(2ம் பக்கத் தொடர்ச்சி)


ஜுலை 27 அன்று வெளியிடப்பட்ட இந்த ஆவணம் ஆயர்கள், மறைமாவட்ட மாமன்றக் குழுக்களுக்காக வடிவமைக்கப் பட்டுள்ளது. இது அனைவருக்கும் ஒரே மாதிரியான திட்டத்தைத் திணிக்காமல், அந்தந்தப் பகுதிகளில் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கக்கூடியவகையில்நடைமுறைசார்ந்தகேள்விகள், அளவுகோல்கள்மற்றும்ஆலோசனைகளைவழங்குகிறது.

மதிப்பீடு என்பது "நன்றியுணர்வு மற்றும் உண்மையின் அனுபவம்" என்று தெரிவித்த மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கர்தினால் மரியோ கிரேச் அவர்கள், மேலும், உள்ளூர் திருஅவைகள் தங்களது மாமன்றப் பயணத்தின் மூலம் கடவுள் எவ்வாறு செயல்பட்டார் என்பதை உணர்ந்துகொள்ளவும், எதிர்கால நடவடிக்கைகளைத் தீர்மானிக்கவும் வேண்டுமென ஊக்குவித்தார்.

"நினைவுகூருதல்" என்பது வரலாற்றில் கடவுளின் செயல்களை அங்கீகரிப்பதையும், மாமன்றத்தின் பலன்களை நன்றியுணர்வுடனும் நேர்மையுடனும் சிந்தித்துப் பார்ப்பதையும் குறிக்கிறது என்பதை இந்த வழிகாட்டி ஆவணம் எடுத்துக்காட்டுகிறது.

இந்த ஆவணம் உறவுகள், திருஅவைச் செயல்முறைகள் மற்றும் பிணைப்புகள் ஆகிய மனமாற்றத்திற்கான மூன்று முக்கியப் பகுதிகளில் கவனம் செலுத்துகிறது.

### விண்ணக வாழ்வில் 53ஆம் ஆண்டு நினைவு



அன்னை மடியில்
25 . 10 . 1910

இறைவன் அடியில்
22 . 08 . 1973

அமரர்

**யோண் பற்றிக்**

[மேல் நீதி மன்ற சட்டத்தரணி – நொத்தரிசு
உள்ளூர் நீதிமன்றத் தலைவர்]

**அமரர் பியாற்றீஸ் சாந்த நாயகி (01.04.1924 - 03.10 2015) அவர்களின் அன்புக் கணவர் அமரர் யோண் பற்றிக் அவர்களின் 53ஆவது ஆண்டு மரண தினமாகும் 22 ஓகஸ்ற் 2026 சனிக்கிழமை அன்று இவரின் ஆன்ம இளைப்பாற குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் காலை 05.30 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.**

மகன் - பசில் பற்றிக் குடும்பத்தினர்
மெல்போண் - அவுஸ்திரேலியா

### விண்ணக வாழ்வில் 4ஆம் ஆண்டு நினைவு



பிறப்பு
07 . 11 . 1936

இறப்பு
16 . 08 . 2022

அமரர்

**பிலிப் அருளானந்தம்**

பணிவோடு பண்பையும், அன்பையும் ஊட்டி
எம்மை ஒற்றுமையுடன் இனிதே வாழ
ஓயாது உழைத்தீர்கள். உங்கள் உழைப்பு
என்றும் நிலைத்திருக்கும்
எம்மைப் பெற்ற அன்புத் தந்தையே
நீங்கள் காட்டிய வழியில் என்றும் வாழ்வோம்.
இறைவனிடம் எமக்காக மன்றாடுங்கள் நாமும்
உங்களுக்காய் தினமும் வேண்டுகின்றோம்.

அன்பு நினைவுகளுடன்
பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

36/2, கோவில் வீதி
யாழ்ப்பாணம்

### 26ஆம் ஆண்டு நினைவினில்...



பிறப்பு
10 03 1934

இறப்பு
24 08 1995

**அமரர் பாக்கியம் ஞானப்பிரகாசம்**

ஆண்டுகள் பல கடந்தாலும்
அன்பு மட்டும் மாறாது அம்மா உங்கள்
புன்னகை ததும்பும் பூமுகம்
எம் மனக்கண்ணில்
என்றும் அழியா நினைவுகளாய்...
என்றும் எம் நெஞ்சினில்
ஆண்டவன் அடியினில்
இளைப்பாறுங்கள்.....

மகன்: ஞா . விமலதாசன் (கனடா)
மகள்: ஜஸ்ரினா ஜோர்ஜ் (ஜேர்மனி)
மருமகள், மருமகன், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள் மற்றும் உறவினர்கள்

ஊர்காவற்றுறை

## புனித பத்திரிசியார் கல்லூரியில் வருடாந்த பரிசளிப்பு விழா



யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் முன்னெடுக்கப்பட்ட வருடாந்தப் பரிசளிப்புவிழா கடந்த 31ஆம் திகதி கல்லூரி மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை அதிபர் அருட்தந்தை திருமகன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கல்லூரி முகாமையாளர் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 2025ஆம் கல்வி ஆண்டில் கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சிறந்த முறையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை மூத்த ஆலோசனை மருத்துவரும் கல்லூரியின் பழைய மாணவருமான வைத்தியர் ராஜேந்திரா அவர்கள் பிரதம விருந்தினராகவும் இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாக பௌதீக அறிவியல் துறை விரிவுரையாளரும் கல்லூரியின் பழைய மாணவருமான திரு. பாலசங்கர் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பெற்றோர்கள், பழைய மாணவர்களெனப் பலரும் கலந்து கொண்டனர்.

## குடும்பங்களுக்கான சிறப்பு விழிப்புணர்வுக் கருத்தமர்வு



குடும்பங்களுக்கான சிறப்பு விழிப்புணர்வு கருத்தமர்வு கடந்த 19ஆம் திகதி அல்லைப்பிட்டி புனித யுவானியார் ஆலயத்தில் நடைபெற்றது. தீவக மறைக்கோட்ட முதல்வரும் அல்லைப்பிட்டி பங்குத் தந்தையுமான அருட்தந்தை லியோ ஆம்ஸ்ரோங்க் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேல்பிள்ளை டேவிட் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திருப்பலியும் தொடர்ந்து கருத்துரைகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் உரும்பிராய் கத்தோலிக்க பாடசாலை அதிபர் திரு. இக்னேஸியஸ் அவர்களின் குடும்ப வாழ்வு மற்றும் நற்காலத்தில் குடும்பங்கள் எதிர்நோக்கும் சவால்கள் தொடர்பான சிறப்புரையும் விழிப்புணர்வு படக்காட்சியும் கலந்துரையாடலும் இடம்பெற்றன. யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலையமும் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களமும் இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில் பங்குமக்கள் பலரும் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா



குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை றெக்ஸ் சவுந்தரா அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது. 16ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆயத்தநாள் வழிபாடுகள் ஆரம்பமாகி 24ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழா திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் புதிதாக நிறுவப்பட்ட கொடிக்கம்ப நினைவுமலரும் அதற்கான நினைவுக்கல் திரைநீக்கமும் இடம்பெற்றன. யாழ். மறைமாவட்ட ஆயர் அவர்கள் நினைவுமலரை வெளியிட்டுவைத்து நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்துவைத்தார். அன்று மாலை குருநகர் பிரதேசத்தை வலம்வரும் புனிதரின் திருச்சொருபத்தேர்ப்பவனியும் ஆசீர்வாதமும் இடம்பெற்றன.

## நவீன தொடர்பாடலும் அதனால் உருவாகும் சவால்களும் தொடர்பான கருத்தமர்வு



தொடர்பாடலாண்டு சிறப்பு நிகழ்வாகப் பருத்தித்துறை மறைக்கோட்ட இளையோர் மற்றும் மறையாசிரியர்களை இணைத்து முன்னெடுக்கப்பட்ட நவீன தொடர்பாடலும் அதனால் உருவாகும் சவால்களும் தொடர்பான கருத்தமர்வு கடந்த 19ஆம் திகதி கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது.

பருத்தித்துறை மறைக்கோட்ட ஊடக இணைப்பாளர் அருட்தந்தை றொக் பஸ்ரியன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மறைநதி கத்தோலிக்க ஊடகமைய இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஸ்ரிபன் மற்றும் யாழ். திருமறைக்கலாமன்றக் கலைஞர் திரு. ஜெகன் கரன்சன் ஆகியோர் கலந்து கருத்துரைகள், விளையாட்டுக்கள், கலந்துரையாடல், விழிப்புணர்வுப் படக் காட்சிப்படுத்தல் என்பவற்றின் ஊடாக பங்கேற்பாளர்களை வழிப்படுத்தினர். பருத்தித்துறை மறைக்கோட்ட முதல்வர் அருட்தந்தை கிருபாகரன், யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு இயக்குநர் அருட்தந்தை ஜோண் குருஸ், கரவெட்டி பங்குத்தந்தை அருட்தந்தை விஜின்ரஸ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன் 60க்கும் அதிகமான இளையோர் மற்றும் மறையாசிரியர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்.

## பருத்தித்துறை மறைக்கோட்ட பீடப்பணியாளர்களுக்கான கள அனுபவ பயிற்சி



பருத்தித்துறை மறைக்கோட்ட பீடப்பணியாளர்களுக்கான கள அனுபவப் பயிற்சி கடந்த 11ஆம் திகதி பருத்தித்துறை தும்பளை புனித லூர்து அன்னை கெபியில் நடைபெற்றது. மறைக்கோட்டப் பீடப்பணியாளர் குழு இணைப்பாளர் அருட்தந்தை ஜோண் குருஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் செபமாலைப் பவனி, திருப்பலி, ஆன்மீக உரை, விளையாட்டுக்கள், கருத்தமர்வு, உதவு முறைப் பயிற்சிகள், என்பன இடம்பெற்றன. அருட்தந்தை இதயராஜ் மற்றும் யாழ். மறைமாவட்ட இளையோர் ஆணைக்குழு வளவாளர்கள் இணைந்து கருத்தமர்வை நெறிப்படுத்தியதுடன் யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர் திரு. நிசாந்தன் அவர்கள் உதவு முறை பயிற்சியையும் முன்னெடுத்தார்.

சிறப்பு நிகழ்வாக யாழ். புனித மடுத்தீனார் சிறிய குருமட மாணவர்களின் "வந்து பாருங்கள்" இறையழைத்தல் நிகழ்வு இடம்பெற்றதுடன் இந்நிகழ்வை அருட்தந்தை செல்வரட்ணம் மற்றும் குருமட மாணவர்கள் இணைந்து குறு நாடகம், குழுச்செயற்பாடுகள், அனுபவப் பகிர்வுகள் ஊடாக வழிப்படுத்தினர். இந்நிகழ்வுகளில் மறைக்கோட்டப் பங்குகளைச் சேர்ந்த 250 பீடப்பணியாளர்கள் பங்குபற்றிப் பயனடைந்தனர்

## கார்மேல் அலையகத்தில் திருவிழா

தாளையடிப்பங்கில் பணியாற்றும் கார்மேல் சபை அருட்சகோதரிகள் மற்றும் சபை அன்னையினர் இணைந்து முன்னெடுத்த சபைத் திருவிழா கடந்த 22ஆம் திகதி தாளையடி புனித கார்மேல் அலையகத்தில் நடைபெற்றது. திருப்பலியை பங்குத்தந்தை அருட்தந்தை ஆதர் யஸ்ரின் அவர்கள் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். இத்திருப்பலியில் கட்டைக்காடு பங்குத்தந்தை அருட்தந்தை வசந்தன், அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஸ்ரனிஸ் சுவாம்பிள்ளை, அமலமரித்தியாகிகள் சபை அருட்சகோதரர் ஜெனிஸ்ரன் அருட்சகோதரர் றங்கண, கார்மேல் அலையக மடத்தலைவி மரியமலர், சபை அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்கள் கலந்து கொண்டனர்.

## யாழ். மறைமாவட்ட ஓய்வுநிலை மூத்த குருக்களுக்கான கௌரவிப்பு



யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றிய ஓய்வுநிலையிலுள்ள மறைமாவட்ட மூத்த குருக்களை கௌரவித்து இளம் குருக்களால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பு நிகழ்வு கடந்த 23ஆம் திகதி கிளிநொச்சி, உருத்திரபுரம் ஆரோபணம் மாணவர் விடுதியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களின் தலைமையில் திருப்பலியும் தொடர்ந்து மூத்த குருக்களுக்கான கௌரவிப்பும் அவர்களின் அனுபவப் பகிர்வும் இடம்பெற்றன. கௌரவிப்பு நிகழ்வில் பேரருட்தந்தை தோமஸ் சவுந்தரநாயகம், அருட்தந்தையர்கள் தேவராஜன், இருதயதாஸ், தேவசகாயம், மொண்பேர்ட், ஜெயசீலன், றெஜி இராஜேஸ்வரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் முதனனமை அருட்சாதனம்



யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பிள்ளைகளுக்கான முதல்நன்மை அருட்சாதனம் வழங்கும் நிகழ்வு பங்குத்தந்தை அருட்தந்தை ஜெறோ செல்வநாயகம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 01ஆம் திகதி நடைபெற்றது.

கனடா றொறன்ரோ புனித ஆரோக்கிய அன்னை பங்குத்தந்தை அருட்தந்தை கனீசியஸ் ராஜ் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியில் 106 சிறார்கள் முதல்நன்மை அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்டனர்.


## நீங்காத நினைவுகளில்...

60ம் வருட நிறைவின் நினைவு

52ம் வருட நிறைவின் நினைவு





அமரர்
சந்தியோ அந்தோனிப்பிள்ளை
அன்னை மடியில்
1908.12.26
ஆண்டவன் சந்நிதியில்
1966.08.15

அமரர்
அன்னம்மா அந்தோனிப்பிள்ளை
அன்னை மடியில்
1914.04.01
ஆண்டவன் சந்நிதியில்
1974.08.12

"சீவியத்தில் நேசித்த உங்கள் இருவரையும் மரணத்திலும் மறவோம்"

வழிகின்ற விழிநீரில் வதனம் பூக்க
வரலாறாய் எம் நெஞ்சில் என்றும் வாழ்வீர்கள்
இறைவனது திட்டமதை ஏற்று நீங்கள்
இறைவனடி சேர்ந்தீர்களே!
சந்தமும் உங்கள் நினைவால் வாடுகின்றோம்
சாந்தி பெற சரிந்த மனங்களுடன்
அஞ்சலி செலுத்துகின்றோம்

அன்புடன் எமைப் பெற்று வளர்த்து பொலிவுடன் விளங்கச் செய்த பொன்னொளிகள் மறைந்து ஆண்டுகள் 60, 52 ஆகியதே.

இவர்களின் ஆன்மாக்கள் நித்தியமும் இறைவனில் இளைப்பாற வேண்டி 2026.08.12ம் திகதி புதன்கிழமை காலை 5.45 மணிக்கு புனித மரியன்னை பேராலயத்திலும், மருதமடு அன்னை திருத்தலத்திலும் இரங்கல் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

தாயகம்
42/5 மவுண்கார்மல் வீதி
யாழ்ப்பாணம்.

என்றும் மறவாத நினைவுகளுடன்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு ஆவணி மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.